DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
PROPERTY MAX Realty Inc. Brokerage
THE PULSE OF PROPERTIES
+94772332300

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Independently Owned and Operated
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
* Family sponsorship;
* Super visa for parents and grandparents including health insurence;
* Citizenship;
* Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1515
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday April 18, 2025

# மார்க்கம் நகரில் நடைபெற்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் விருது விழாவில் இவ்வருடத்திற்குரிய 6 வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பெற்றனர்





கடந்த 12ம் திகதி சனிக்கிழமையன்று மார்க்கம் நகரில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு சம்மேளனத்தின் தலைவர் அரி அரிகரன் அவர்கள் தலைமை வகித்தார். இங்கே காணப்படும் 3 படங்களில் சிறந்த வர்த்தக வெற்றியாளர்கள் விருது பூரணகுமார் துரைசாமி--சிறந்த சந்தைப்படுத்தல் வர்த்தக வெற்றியாளர் விருது பூரணி சொர்ணபாலா -இவ்வருடத்தின் தலைவர் விருது தேவதாஸ் சண்முகலிங்கம் ஆகியோர் தங்கள் விருதுகளைப் மேடையில் பெற்றுக்கொள்வதைக் காணலாம் மேற்படி விழாவில் உள்ளூர் கலைஞர்கள் பலருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் அன்றை விருது விழா மேடையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் இணைந்து திரட்டிய 1 மில்லியன் 35 ஆயிரம் கனடிய டாலர்களுக்கான காசோலை கனடிய தமிழர் சமூக மையத்திற்கு வழங்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 13ம் பக்கம்)



# 18ம் திகதி வெள்ளி 19ம் திகதி சனி ஆகிய இரு நாட்கள் ஸ்காபுறோவில் குரு யோகராஜா தரும் மாபெரும் 'OLD IS GOLD'

"OLD IS GOLD" மாபெரும் மெல்லிசை விழா. இன்று 18ம் திகதி வெள்ளிக்கிழமையும் நாளை 19ம் திகதி சனிக்கிழமையும் ஸ்காபுறோவில் மெக்கோவன்-நக்கட் சந்திப்புக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது இந்த விழாவில் ஆரோசை இசைக்குழு மற்றும் நட்சத்திரா இசைக்குழு ஆகியவையின் இசையில் தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல பாடகர் மறைந்த ரிஎம். சௌந்தரராஜன் அவர்களின் புதல்வர் ரிஎம்எஸ். செல்வகுமார், பிரபல பின்னணிப் பாடகர் ராமு மற்றும் "சரிகமப" பாடல் போட்டி புகழ் அக்சயா ஆகியோர் இனிய பாடல்களை தரவுள்ளனர். **55 Nugget Ave. Unit 10 Scarborough** என்னும் விலாசத்தில் உள்ள **KARIS EVENT PLACE** மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி இரண்டு நாட்கள் நடைபெறுகின்றது

மாபெரும் மெல்லிசை விழாவை ரசித்து மகிழ அங்கு திரள வேண்டும் என அனைவரையும் அழைக்கின்றார் குரு யோகராஜா - தொடர்புகளுக்கு 416.564.9642 அல்லது 416.566.0790

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

# GOOD FRIDAY LONG WEEKEND



**TICKETS**

**$30 $50 VIP($100)**

**416-566-0790**

AAROSAI "WHERE MUSIC BEGINS..."

**APRIL 18**

NATCHATHRAA'S MUSIC GROUP

**APRIL 19**




## Ticket Available Locations

### Scarborough

**Cell Tell Mobility**
2611 Eglinton Ave East Tel: 416-266-6818

**Cell Tell Mobility**
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776

**Pasumai Market**
2-2002 Middlefield Rd, Markham,
(905) 472-5525

### Markham & Steeles

**New Royal Fashions**
Tel: 416-519-1119

**New Ranganas Jewellery**
Tel: 647-702-2159

**New Spiceland Supermarket Video**
647-471-1810

### Majestic City

**Designs 2 Prints LTD**
Tel: 647-858-2290

**GTA Square Mall**
Winners Lotto Centre
Tel: 416-291-9990

### Eraa plaza (Neilson / Finch)

**Sai Elanthulir Fashion**
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002

### Etobicoke (Kipling & Steeles)

**A S A Financial Service**
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425

### Tapscott Rd / Finch ave

**DTA Convenience**
416-332-0961 5633 Finch Ave E units 5

### Markham / Karachi Dr

**Cell Tel Mobility**
(905) 201-4859
45 Karachi Dr , Unit#49 Markham , Ont , L3S 0B5

**SCAN TO BUY ONLINE TICKET**

# APRIL 18&19 2025

**FRIDAY & SATURDAY @6PM**

KARIS EVENT PLACE

**55 Nugget Ave unit 10, Scarborough, ON M1S 4L4**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# சாதாரண தமிழர்கள் அரசியல் அனாதைகளாக இருப்பதற்கு தென்னிலங்கைக் கட்சிகளை கடந்த காலங்களில் நிராகரித்தமை காரணமாக அமையலாம்!

“தென்னிலங்கைக் கட்சிகளை ஆதரிக்க வேண்டாம்“ என்று தற்போது கோசங்களை எழுப்புகின்றவர்கள் யாருடைய “வாரிசுகள்“ என்றால் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரம் தங்கள் ஆதரவை வழங்கிய வண்ணம் அந்தக் கட்சியிடமிருந்து மாறி மாறி தங்கள் பிள்ளைகளுக்கு பதவிகளைப் பெற்றுக்கொண்டிருந்த தமிழ்த் தலைவர்களுடைய தொடர்ச்சிதான் என்பதை நிச்சயமாகக் கூறலாம். அவ்வாறிருக்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ளாட்சித் தேர்தல் களத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது பின்வருமாறு கூறுகின்றார் தமிழ்க் கட்சிகள் எல்லாமே உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுவருகின்றன. ஜே.வி.பியை மாத்திரம் அல்ல் தென்னிலங்கைக் கட்சிகள் எதையுமே நாம் ஆதரிக்க முடியாது.என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம் தமிழ்க் கட்சிகளில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் யார் யாரை தமிழ் மக்கள் ஒதுக்கிவைக்க வேண்டும் என்பதையும் அவர் வெளிப்படையாகக் கூறினால் எமது தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களில் அரைவாசிப் பேர் தகுதியற்றவர்களாகவே கணிக்கப்படுவார்கள் என்பது ஐங்கரநேசன் அவர்களுக்கு நன்கு தெரியும்.

இன்னுமொன்றையும் நாம் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். சுமார் 40 ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இலங்கைக் கம்யுனிஸ்ட் கட்சி. சுமசமாஜக் கட்சி சீனச் சார்பு கம்யுனிஸ்ட் கட்சி ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இணைந்து அவற்றின் கொள்கைகளை பரப்புவதில் துரிதமாக ஈடுபட்டார்கள். ஆனால் அந்த காலப்பகுதியில் ஐக்கிய தேகியக் கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்த வேுண்டும் என்பதற்காக செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றவர்கள் மேற்படி இடதுசாரிக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று உரத்துச் சத்தமிட்டார்டகள். ஆனால் அன்றை அரசியலின் ஆரம்பரம் டட்லி சேனநாயக்காவிலிருந்து ஆரம்பித்து பின்னர் ஜேஆர் பிரேமதாச என்று தொடர்ந்த இறுதியில் ரணிலின் காலம் வரையிலும் எமது தமிழ்த் தலைவர்கள் அனைவரும் இடது சாரிச் சிந்தனைகளுக்கு எதிராகவே செயற்பட்டார்கள். ஆனால் ரணில் என்னும் கபடத்தனம் கொண்ட அரசியல்வாதியால் தமிழ் மக்கள் அனைவருமே வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதும் உண்மையே. அதன் விளைவை அப்பாவித் தமிழ் மக்கள் தற்பொழுது அனுபவிக்கின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால். தற்கால தமிழர் அரசியலில் பிரச்சனைக்குரியவராக உள்ள சுமந்திரன் அவர்களும் ஐக்கிய தேசியக் கட்சி என்ற முகாமிற்குள் இருந்து தான் தமிழ் கட்சி ஒன்றுக்கு அனுப்பப்பட்டவர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. இதைப் போன்றே மறைந்த சம்பந்தன் ஐயா வரையிலும் இறுதியிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே மறைமுகமான ஆதரவை வழங்கி வந்தார். ஆனால் ரணில் வரையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆடசிக் காலத்தில் எந்தவொரு நன்மையும் தமிழ் மக்களுக்கு கிட்டவில்லை. ஆனால் அக்காலப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக விளங்கிய அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் “ஆட்சியினரால் “கவனிக்கப்பட்டவர்கள்“ என்பதும் வெளிச்சத்திற்கு வந்த விடயமே. ரணில் அவர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிப்பதற்கு எமது “தமிழ்த் தரப்பு“ உதவியமைக்காக அவர்களுக்கு “சந்தோசங்கள்“ கிட்டியமை பகிரங்கமாக கொழும்பில் பேசப்படும் விடயங்கள்தான்.

இந்த வேளையில் தற்போது ஆட்சியில் உள்ள அநுரவின் தேசிய மக்கள் முன்னணி“ கட்சியானது வடக்கை நோக்கி தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதை எவ்வாறு தமிழ்க் கட்சிகள் முறியடிக்கப் போகின்றன என்பதும் முக்கியமானதொன்றாகும். ஏனென்றால் அநுர அவர்களின் அரசாங்கத்தில் வெளிப்படைத் தன்மை இல்லாமையும் அவரது சார்பில் வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் இயலாமையும் அந்தக் கட்சியிடம் வடக்கின் உள்ளாட்சி நிர்வாகத்தை தமிழ் மக்கள் வழங்க வேண்டும் என்று நாம் கூற வரவில்லை. அதுவும் “யோசிக்க வேண்டிய“ விடயம் தான். இவ்வாறு நான்கு பக்கங்களிலும் தமிழ் மக்கள் யோசித்து வாக்களிக்க வேண்டும் என்ற அவசியமான ஒன்றே எம் மக்கள் முன்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் நூற்றுக்கணக்கானவர்கள் சட்டத்தரணிகளும் உள்ளார்கள். அப்படியானால் ஐங்கரநேசன் போன்று வெளிப்படையாகப் பேசுகின்ற வடக்கின் அரசியல்வாதிகள் மேலும் வெளிப்படைத்தன்மை கொண்டவர்களாக தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் இறுதியில் ஐங்கரநேசன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியாக பின்வரும் வரியை இங்கு பதிவு செய்து எமது இவ்வாரக் கதிரோட்டத்தை நிறைவு செய்கின்றோம். “தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரப் பண்டமாக்கி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும்“ என்றும் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். “கண்ணா நீயுமா?“ என்று கேள்விகளை கேட்க வேண்டிய தலைவர்களிடத்தில் மீண்டும் மீண்டும் தமிழர்களின் அரசியல் தலைமை கையளிக்கப்பட வேண்டுமா என்பதும் எமது கேள்விகளில் இன்னொன்றாக அமைகின்றது.






# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025
**Time:** 6:00 PM
**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

Uthayan Literary and Artistic Exuberance Award
Uthayan Inter-Communal Relationship Award
Uthayan Business Entrepreneur Award - Ontario
Uthayan Business Entrepreneur Award - Quebec
Uthayan Leadership Award
Uthayan Youth Icon Award
Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலை, கனிம மண் அகழ்வு திட்டத்தை ஜனாதிபதி நிறுத்த வேண்டும்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை




- எஸ்.ஆர்.லெம்பேட் (16-04-2025)

மக்களினுடைய நலனை கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் 16ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மற்றும் கனிம மண் அகழ்வு திட்டங்களை நிறுத்துமாறு கோரி பல வருடங்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தாம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக இந்தத் திட்டங்களை நிறுத்துவதாக ஜே.வி.பியின் சட்டத்தரணிகள் குழு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக எம்மைச் சந்தித்து வாக்குறுதி அளித்திருந்தன.

ஆனால் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. காற்றாலை திட்டம் டைட்டானியம் அகழ்வு கரையோர கனிம மணல் அகழ்வு, இம்மூன்று திட்டங்களாலும் மன்னார் தீவுப் பகுதி பல்வேறு விதமான சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகும் என பல துறை சார்ந்த வல்லுநர்கள் தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் வேளையில் அரசு அதனைப் பொருட்படுத்தாமல் செயல்படுத்த முனைகிறது.

மக்களினுடைய நலனை கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம். கடந்த காலத்தில் உள்ள ஆட்சியாளர்கள் மீது அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் என்றும் இந்தியாவின் கைக்கூலிகள் என்றும் பல்வேறு விதமான விமர்சனங்களை தெரிவித்து வந்த ஜனாதிபதி அதே வேலையை அவரும் முன்னெடுப்பது வெட்கக்கேடான அரசியல் செயல்பாடு ஆகும்.

நடைமுறைச் சாத்தியமற்ற போலியான வாக்குறுதிகளை வழங்கி தேர்தலில் வெற்றி பெற்று அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றாடுகின்றது அரசு. ஆகவே மூன்றாவது தேர்தலிலும் போலியான வாக்குறுதியை வழங்கி வெற்றி பெற முனைகிறீர்களா? நாளை மன்னாருக்கு வருகை தர உள்ள தாங்கள் இம் மூன்று திட்டங்களையும் நிறுத்துவதாக அறிவிக்க வேண்டும்.

இல்லையேல் நீங்கள் குற்றம் சாட்டிய படி ஏனைய அரசியல்வாதிகளுக்கும் தங்களுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லாதவராகவே காணப்படுவீர்கள்.

அரசியலிலும் அறம் மிக முக்கியம். நீண்ட காலத்துக்கு எவரையும் ஏமாற்ற முடியாது. மீண்டும் மீண்டும் இந்த மக்களை ஏமாற்றி வாக்கு பெற முனையாதீர்கள். நீங்கள் பின்பற்றுவதாக மேலிடையிடும் இடதுசாரித்துவத்துக்கே அவமானமும் இழுக்கும் ஆகும் தாங்கள் ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி.

இப்படி மன்னாரில் உள்ள இம்மூன்று திட்டத்தையும் இரத்து செய்ய வேண்டும் இல்லையேல் மக்கள் தொடர்ந்து ஏமாற மாட்டார்கள் என்பது இத்தேர்தல் தங்களுக்கு உணர்த்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# நானாட்டான் சுற்றுவட்டத்தில் உள்ள வாகனங்களுக்கான மின்சார இணைப்பு பழுது பார்க்கும் கடை ஒன்றில் தீ பரவியதால் அது முற்றாக எரிந்து நாசம்




- எஸ்.ஆர்.லெம்பேட் (17-04-2025)

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானாட்டான் சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள வாகனங்களுக்கான வயரிங் பழுது பார்க்கும் கடை ஒன்றில் 17ம் திகதி அன்று வியாழக்கிழமை மாலை ஏற்பட்ட தீ பரவல் காரணமாக அந்த கடை முற்றாக எரிந்து சேதமாகியுள்ளது.

அந்த கடைக்கு உள்ளே நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் வண்டிகளும் முற்றாக எரிந்துள்ளதாக தெரிய வருகிறது.

அருகில் உள்ள ஆலயத்தில் பெரிய வியாழன் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் அங்கிருந்த இளைஞர்கள் ஓடி வந்து குறித்த தீப்பரவலை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் கடை முற்றாக எரிந்து அதற்குள் உள்ள இயந்திர பொருட்களும் எரிந்து சாம்பலாகி உள்ளன.



குறித்த கடையில் ஏற்பட்ட திடீர் மின் ஒழுக்கு காரணமாகவே தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.





# சந்திரசேகரத்தின் பேச்சு காடைத் தனமாக அரசாங்கம் செயல்பட ஆரம்பித்திருக்கின்றது என்பதனையே காட்டுகின்றது என்கிறார் எம்.ஏ.சுமந்திரன்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

- ந.லோகதயாளன்

அமைச்சர் சந்திரசேகரத்தின் பேச்சு காடைத் தனமான முறையில் அரசாங்கம் செயல்பட ஆரம்பித்திருக்கின்றது என்பதனையே காட்டுகின்றது என தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று நடாத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் மேலும் விபரம் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் ஆதரவு தமிழ்க் கட்சிகளிற்கு கிடையாது அது தேசிய மக்கள் சக்திக்கே கொடுக்கப்பட்டுள்ளது என ஓர் தவறான விளம்பரம் கொடுக்கப்படுகின்றது. போட்டியிட்ட கட்சிகளில் அவர்களிற்கு அதிகப்படியான வாக்குகள் கிடைத்ததன் அடிப்படையில் அப்படியாக சொல்லுகின்றார்கள். நாடாளுமன்றத்தில் யாழ்ப்பாணத்தில் 25 சதவீதமான வாக்கினைப் பெற்றது. அதற்கு அடுத்தபடியாக தமிழ் அரசுக் கட்சி 20 வீதத்தை அண்மித்த வாக்கினைப் பெற்றது.

மே 6 இல் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலே வரும் முடிவு அரசாங்கம் சொல்லுகின்ற கூற்று உண்மையா, இல்லையா என்பதை சோதித்துப்பார்க்கின்ற தருணம். ஆகையினாலே நாம. மக்களிடத்தில் கோருகின்றோம் தேசிய மக்கள் சக்திக்கோ, தென்னிலங்கை கட்சிக்கோ ஆணை கொடுத்து விடவில்லை நாடாளுமன்றத் தேர்தலில் கூடிய வாக்கினைப் பெற்றதனால் அவ்வாறு காண்பிக்கப்படுகின்றது. அதனால் இந்தத் தடவை அப்படியாக வாக்களிக்காது தமிழ்க் கட்சிகளிற்கு வாக்களிக்குமாறு கோருகின்றோம்.

தமிழ் கட்சிகள் என்கின்றபோதும் பிரிந்து, பிரிந்து பலருக்கும் வாக்களிக்கும்போது நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெற்றதைப் போன்றே இருக்கும். அதனால் ஒரு தமிழ் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். இன்று நாட்டிலே சமஸ்டி ஆட்சி வேண்டும் என்று 75 ஆண்டுகாலமாக அடிநாதமாககொண்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சிதான் எனவே தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களித்து அந்த ஆணையை வழங்க வேண்டும்.

தமிழர் தேசம் முழுமையாக நாடாளுமன்ற உறுப்பினரைக்கொண்டு வியாபித்துள்ள ஒரே தமிழ்க் கட்சி தமிழ் அரசுக் கட்சி மட்டும்தான். பிரிந்து ஏனைய உதிரிக் கட்சிகளிற்கும் வாக்களித்தால் அரசாங்கத்திற்கு ஆணை கிடைத்திருக்கின்றது என்பதைப் போன்று தோற்றம் ஏற்படும்.

வடக்கு கிழக்கில் தமிழ் அரசுக் கட்சி 59 சபைகளில் போட்டியிடுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுத்தமான நாடு என அதாவது கிளீன் சிறிலங்கா என ஆட்சிக்கு வந்தவுடன் ஓர் வேலைத் திட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் இதற்கு முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் செய்நாத அளவு தேர்தல் விதிமுறை மீறல்களை அவர்கள் நேரடியாகவே செய்கின்றார்கள். அமைச்சர் சந்திரசேகரத்தின் உரையைப் பார்த்தேன் அதல் அவர் கூறுகின்றார் எமது கூட்டத்தை நிறுத்தப்பார்த்தார்கள் எனவும் முன்னாள் தவிசாளரை நரியென்ற சொல் பிரயோகம் செய்தார், அதன்போது அவர்களிற்கு விளையாடத் தெரிந்தால் எங்களிற்கும் விளையாடத் தெரியும் என்று ஒரு ரவுடி பாணியில் சவால் விடுகின்றார். அரசிடம் நான் நேரடியாக கேட்க விரும்புவது இதுதானா உங்கள் கிளீன் சிறிலங்கா.

நேரடியாகவே தேர்தல் விதிகளை மீறிக்கொண்டு, மீறுவது மட்டுமன்றி ஓம் நாம் மீறுவோம் எங்களிற்கு அப்படி விளையாடத் தெரியும் என்று சவால் விடுகின்ற அளவிற்கு காடைத் தனமான முறையில் அரசாங்கம் செயல்பட ஆரம்பித்திருக்கின்றது. இது வாக்காளர்களிற்கும் விழிப்புணர்வைக்கொண்டு வர வேண்டும். ஊழல் அற்ற ஆட்சி, சீரான ஆட்சி, சட்டத்தை மதிப்போம் என்றெல்லாம் சொல்லுபவர்கள் முதலாவது சந்தர்ப்பத்திலேயே வெளிப்படையாக சட்டத்தை மீறுகின்றதை மக்கள் கவனத்தில்கொள்ள வேண்டும் என்றார்.

# "வவுனியாவில் 1500 சிங்கள குடும்பங்களை குடியமர்த்த முயல்கிறார்கள்: இதை சுட்டிக் காட்ட முதுகெலும்பற்ற செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்குகின்றார்." கஜேந்திரன் குற்றச்சாட்டு



- ந.லோகதயாளன்

கீழ் மல்வத்து ஓயா திட்டத்தின் கீழ் வவுனியாவின் செட்டிகுளத்தில் 1500 சிங்கள குடும்பங்களை குடியமர்த்த முயல்கிறார்கள். இதை சுட்டிக் காட்ட முதுகெலும்பற்ற செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத் திட்டத்தில் நன்மை இருப்பதாக கூறி அதை ஆதரித்துள்ளார். ஏன் ஆதரித்தார் என்று சொன்னால் சர்வதேச சமூகத்தின் முன்னால் அவர் அரசை பாதுகாக்கின்றார் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம ஆண்டு கொடூரமான முறையில் எமது விடுதலைப் போராட்டத்தை அரசாங்கம் அடக்கிய போது எதிர்வரும் 50 வருடங்களுக்கு தமிழ் மக்கள் தமது இருப்பை பற்றி சிநதிக்க கூடாது என்று கருதியே கொடூரமாக செயற்பட்டது. பலர் கைது செய்யப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டார்கள்.

ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு இல்லை என்பது தெட்டத்தெளிவானது. நாங்கள் தோற்றுப் போனாலும் ஒரு கொள்கையோடு நின்று தோற்றுப் போனார்கள் என்ற வரலாறு பதியட்டும் என்று தான் கடந்த காலங்களில் இருந்து செயற்பட்டு வருகின்றோம்.

மரணிதத மாவீராகளின் தியாகங்களுக்கு வலிமை இருக்கின்றது என்று உணர்கின்றேன். அடிமையாக வாழக் கூடாது என்பதற்காக நாம் எப்படி செயற்பட வேண்டும் என்று தான் பாடங்களை படிக்க வேண்டும். நாங்கள் பொறுப்பற்ற முடிவுகளை எடுத்திருக்கவில்லை. மக்களுடைய இருப்பு சார்ந்தே ஒவ்வொரு முடிவுகளையும் எடுத்துள்ளோம்.

அழிவின் விளிம்பில் இருக்கின்ற இந்த மாவட்டத்தை பாதுகாப்பதற்காக யுத்தம் முடிந்து 15 வருடங்களுக்கு பின்பும் இளைஞாகள் உயிர் கொடுக்கும் வகையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

வெடுக்குநாறி மலையில் புத்த விகாரையை நிறுவி அதனை பௌத்தமயமாக்க முயன்ற போது மக்கள் திரண்டு அதற்கு எதிராக போராடியிருக்கிறார்கள். நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றாலும் மக்கள் போராட்டங்களே அந்த ஆக்கிரமிப்பை தடுத்துள்ளது. இந்த இளைஞர்களை கட்டுப்படுத்த தொல்பொருட் திணைக்களமும், பொலிசாரும் இணைந்து செயற்பட்டனர். வவுனியா சிறைச்சாலைக்குள் மிருகங்கள் கூட வாழ முடியாது. அவ்வாறாக சிறைச்சாலைக்குள் எமது இளைஞர்கள் அடைக்கப்பட்டார்கள். இதன் மூலம் அவர்களை முடக்க நடவடிக்கை எடுத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் தமிழினமாக ஒற்றுபட்டு போராடி அவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

அவர்கள் போராடி இருக்கவில்லை என்றால் குருந்தூர் மலை போன்று வெடுக்குநாறியில் புத்தர் கோவில் இருந்திருக்கும். 2009 வரை விடுதலைப் புலிகள் ஆக்கிரமிப்புக்களை தடுத்தார்கள். 2009 இற்கு பின் 2013 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஸ அரசால் கொக்கசான்குளம் பகுதியில் சிங்கள குடியேற்றம் உருவாக்கப்பட்டு 2015 இல் நல்லாட்சிக் காலத்தில் வவுனியா சைவப்பிரகாச கல்லூரியில் வைத்து உறுதிகள் வழங்கப்பட்டது.

இன்று வவுனியா வடக்கு பிரதேச சபையில் 5 சிங்கள பிரதிநிதிகள் வருவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. சிங்கள பேரினவாதம் மட்டும் எங்களது அழிவுக்கு காரணமாக இருக்கவில்லை. காலம் காலமாக சிங்கள பேரினவாதிகள் எங்களது தரப்பில் இருந்து விலைபோகக் கூடிய சலுகைகளுக்கு அடிபணியக் கூடியவர்களை பக்கத்தில் வைத்துக் கொண்டு தான் அனைத்து காரியங்களையும் ஒப்பேற்றியுள்ளார்கள். இந்த நிலமை தடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் எங்களது அணி வெற்றி பெற வேண்டும்.

மக்கள் சக்திக்கு ஒரு வலிமை இருக்கிறது. அது உறுதியாக இருந்தால் வெற்றி பெறும். ஆகவே, உறுதியாக நிற்கக் கூடிய ஒரு தரப்பை பலப்படுதத வேண்டியது மக்களது கடமை. அந்த கடமையை மககள் சரியாக செயதால் ஒவ்வொருவரும் சபைகளில வெற்றி பெற்று, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் உங்கள் கருத்துக்களுக்கு பெறுமதி இருக்கும். அதனை சர்வதேச சமூகம் தட்டிக் கழிக்க முடியது.

ஆகவே, நீங்கள் ஆற்ற வேண்டிய கடமை என்பது மக்களிடம் சென்று நியாயங்களை சொல்லுங்கள். தமிழ் தேசியத்தின் பால் உறுதி கொண்டவர்கள் எம்முடன் கை கோர்த்துள்ளார்கள்.

சிறிகாந்தா ஐயா ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் இருந்தார்கள். செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்றார்கள். ஆனாலும், அவர் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தமையை எதிர்த்தார்கள். அது பிழையானது எனக் கூட்டிக் காட்டிய சிறிகாந்தா ஐயா, சிவாஜிலிங்கம் ஐயா அவர்கள் அதில் இருந்து வெளியேறினார்கள். இன்று கொள்கைக்காக எம்மோடு இணைந்துள்ளார்கள்.

கீழ் மல்லவத்து ஓயா திட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் 1500 சிங்கள குடியேற்றங்களை குடியேற்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது. தந்திரிமலை பகுதியில் நீர்த்தேககம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு 1500 குடும்பங்களுக்கு காணிகள் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகிறது. இத் திட்டத்தால் உண்மையில் அங்கு 15 முஸ்லிம் குடும்பங்கள் நிலங்களை இழந்தன. ஆனால் நீர்திட்டம் எனற பெயரில் சர்வதேச நிதியில் எமது பிரதேசததில் சிங்கள குடியேற்றத்தை கொணடு வர முயல்கிறார்கள். இதை சுட்டிக் காட்ட முதுகெலும்பற்ற அடைக்கலநாதன் தான் வரவு செலவுத் திட்டத்தில் நன்மை இருப்பதாக கூறி அதை ஆதரித்துள்ளார். ஏன் என்று சொன்னால் சர்வதேச சமூகத்தின் முன்னால் அவர் அரசை பாதுகாக்கின்றார்.

அனுரகுமார திஸாநாயக்கா இனவாதத்தின் மொத்த வடிவம். முதல் இருந்த அரசாங்கங்கள் நேரடியாக யுத்த குற்றங்களில் சம்மந்தப்பட்டுள்ளார்கள். ஆனால் அனுர அந்த அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து, இராணுவத்திற்கு ஆட்களை திரட்டிக் கொடுத்தார்கள். இவர்கள் புதியவர்கள் என்ற மாயைத் தோற்றம் கட்டியெழுப்பபடுகிறது. அதை வைத்து தமிழ் மக்களது ஆதரவை பெற்று தமிழ் இனப்படுகொலையை மறைத்து இங்கு அபிவிருத்தி தான் பிரச்சனை என எமது மக்களை வைத்து சொல்ல வைக்கும் செயற்பாடு நடைபெறுகிறது. எமது விரலை வைத்து கண்ணை குத்தும் செயற்பாடு நடக்கிறது.

ஆகவே, எம்மை நாம் ஆளும் நிலை உருவாக வேண்டும். பேரினவாத கட்சிகள் விரட்டியடிக்கப்பட வேண்டும். அவர்களது முகவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டும். கொள்கை மாறாத ஒரு தலைமைத்துவத்தை பலப்படுத்த, எமது சமத்துவமான நிர்வாகத்தை ஏறபடுத்த ஒரு சந்தர்ப்பத்தை கொடுங்கள். எனத் தெரிவித்தார்.

கனடிய செய்திகள் Canadian News

# "ஒன்ராறியோவின் அலிஸ்டன் நகரில் இயங்கிவரும் எமது ஹொண்டா வாகன தயாரிப்புத் தொழிற்சாலையின் உற்பத்தி எதிர்வரும் காலங்களிலும் முழுமையான திறனில் செயல்படும்"

## கனடா ஹொண்டா தலைமையகம் அறிவிப்பு




"ஒன்ராறியோவின் அலிஸ்டன் நகரில் இயங்கிவரும் எமது ஹொண்டா வாகன உற்பத்தி தொழிற்சாலையின் உற்பத்தியானது எதிர்வரும் காலங்களிலும் முழுமையான உற்பத்தித் திறனில் செயல்படும்" என அலிஸ்டன் நகரில் செயற்பட்டு வரும் கனடா ஹொண்டா தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அவசரப்புத்தி வெளிப்பாட்டின் விளைவாக அறிவிக்கப்பட்டுள்ள வாகனங்கள் மீதான வரிக் கட்டணங்களைத் தவிர்ப்பதற்காக தனது ஹொண்டா வாகனங்களின் உற்பத்தியை அமெரிக்காவிற்கு மாற்றுவது குறித்து பரிசீலித்து வருவதாக ஜப்பானிய மொழிப்பத்திரிகையின் செய்தி வெளியானதை அடுத்து, அந்த செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் "எதிர்வரும் எதிர்காலத்திற்காக" எமது ஹொண்டா தொழிற்சாலை, முழு உற்பத்தியையும் வைத்திருப்பதாக ஹோண்டா கனடா அறிவித்துள்ளது.

"ஒன்ராறியோவின் அலிஸ்டனில் உள்ள எங்கள் கனேடிய உற்பத்தி வசதி எதிர்வரும் எதிர்காலத்திற்கான முழு திறனில் செயல்படும் என்பதையும், இந்த நேரத்தில் எவ்விதமான மாற்றங்களும் பரிசீலிக்கப்படுவதில்லை என்பதையும் நாங்கள் உறுதிப்படுத்த முடியும்" என்று மேற்படி ஹொண்டா நிறுவனம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் தெரிவித்துள்ளது. "எதிர்கால தற்செயல் திட்டமிடலுக்கான விருப்பங்களை நாங்கள் தொடர்ந்து ஆய்வு செய்கிறோம், மேலும் எங்கள் வாகன உற்பத்தியிலும் அவற்றின் விற்பனையிலும் ஏற்படும் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க, தேவைப்படும் போது குறுகிய கால உற்பத்தி மாற்ற உத்திகளைப் பயன்படுத்துகிறோம்."

கனடாவிலிருந்து அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்படும் வாகனங்களின் இறக்குமதியில் ட்ரம்ப் அரசாங்கத்தின் 25 சதவீத வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காக அமெரிக்காவில் விற்கப்படும் 90 சதவீத கார்களை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டிருப்பதால், ஹோண்டா இந்த மாற்றத்தை பரிசீலித்து வருவதாக ஹொண்டா கனடா நிறுவனத்தின் பேச்சாளர் 15ம் திகதி செவ்வாயன்றுநிக்கி அறிவித்தார்.

இதேவேளை ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்றமான "குயின்ஸ்பார்" அவையில் செவ்வாய்க்கிழமையன்று சிம்மாசன உரையை ஆற்றிய மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள், அலிஸ்டன் நகரில் உள்ள ஹோண்டா கனடாவின் பாரிய தொழிற்சாலை நிறுவனத்தை அமெரிக்காவிற்கு மாற்றுவதற்கு முயற்சிகள் நடந்தால் அது எமது மாகாணத்தை பாதிக்கலாம் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "அவை இப்போது 100 சதவீத உற்பத்தித் திறனில் உள்ளன, நாங்கள் கனடா ஹோண்டாவை இங்கே வைத்திருக்கப் போகிறோம், மக்களையும் அவர்களின் வேலைகளையும் பாதுகாக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். நான் நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறேன், கனேடிய நடவடிக்கைகளை பாதிக்கும் அத்தகைய உற்பத்தி முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், இந்த நேரத்தில் பரிசீலிக்கப்படவில்லை என்றும் ஒன்றாரியொ முதல்வர் டக்போர்ட் தெரிவித்துள்ளார்."

கனடாவின் வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர், ஹோண்டா தொழிலாளர்களை பணிநீக்கம் செய்யத் தேவையில்லை, நிக்கி பரிந்துரைத்தபடி, அலிஸ்டனிலிருந்து யு.எஸ்.க்கு அதன் சி.ஆர்.வி உற்பத்தியை மாற்றியிருந்தாலும் கூட அவ்வாறு நடக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

"அவர்கள் சி.ஆர்.வி.யை நகர்த்தலாம், இன்னும் சிவிக் நிறுவனத்திற்கு உறுதியுடன் இருக்க முடியும்" என்று ஏபிஎம்ஏ தலைமை நிர்வாக அதிகாரி ஃபிளேவியோ வோல்ப் கூறினார், அலிஸ்டன் நகரில் உள்ள ஹொண்டா தொழிற்சாலை ஆண்டுக்கு 400,000 வாகனங்களை உற்பத்தி செய்கிறது என்று மதிப்பிட்டார். "அலிஸ்டனிலும் அவர்கள் அங்கு நிரந்தரமாக தொழிற்சாலையை நடத்தும் முடிவை எடுத்துள்ளார்கள். அதுவே கனடாவில் 40 ஆண்டுகளாக விற்கும் முதல்தர வாகனம் ஆகும்."

2008 நிதி நெருக்கடி அல்லது பிற சந்தை சரிவின் போது கூட, ஹோண்டா தனது தொழிலாளர்களை தொடர்ந்து வைத்திருக்கும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது என்று வோல்ப் கூறினார்.

"ஹோண்டா இந்த நெருக்கடிகளில் எதுவுமே பின்வாங்கவில்லை அல்லது எந்தவொரு தொழிலாளர்களையும் பணிநீக்கம் செய்யவில்லை", ஹோண்டா மற்றும் டொயோட்டா அவர்களின் வட அமெரிக்க சகாக்களை விட வலுவான நிதி அடித்தளங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.





ஹோண்டாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கனடாவின் உலகளாவிய வாகன உற்பத்தியாளர்களின் (ஜிஏசி) தலைவர், பணிநீக்கங்களை எதிர்பார்க்கவில்லை என்றும் கூறினார்." அவர்கள் ஒருபோதும் கனடாவில் ஒரு ஹொண்டா தொழிலாளியைக் கூட நாம் பணியிலிருந்து நீக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.


# Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கான எமது நிர்வாகத்தில் ஊழலிருந்தால் வெளிக்காட்டுங்கள் என்கிறார் முன்னாள் தவிசாளர் நிரோஷ்



தங்கள் கட்சி அரசியல்வாதிகளைத் தவிர ஏனைய அரசியல்வாதிகளை ஊழல்வாதிகள் என்று குற்றஞ்சாட்டும் அரசாங்கம் முடிந்தால் நாம் கடந்த ஐந்து ஆண்டுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையை நிர்வாகம் செய்துள்ள நிலையில் அங்கு ஊழல்கள் இடம்பெற்றிருந்தால் அதனை கண்டு பிடியுங்கள் என முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

தமது கட்சி நிர்வாகத்தில் அமைத்தால் மாத்திரமே ஊழலுக்கு எதிராக செயற்பட முடியும் என்று அரசாங்கம் பொய் பேசி வருகின்றது. ஏனைய சகல அரசியல் தரப்பினரையும் ஊழல்வாதிகள் போல் கூறுகின்றது.

நாம் கடந்த ஐந்து ஆண்டுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினை நிர்வாகம் செய்திருக்கின்றோம். அதற்கு முன்னரும் மக்கள் பிரதிநிதிகளாக இருந்திருக்கின்றோம். இந் நிலையில், பதவியில் உள்ள அரசாங்கம் என்ற வகையில் நீங்கள் எம்மால் ஊழல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அல்லது துஸ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் தாராளமாக கணக்காய்வு செய்து வெளிக்கொண்டு வருங்கள்.

கிராமங்கள் தோறும் மேடைகளை அமைத்து ஜனாதிபதி மற்றும் பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என சகலரும் தம்மைத் தவிர ஏனையவர்கள் சகலரும் ஊழல்வாதிகள் என்கின்றனர். தாம் சபைகளை கைப்பற்றினால் மாத்திரமே கிராமங்களை கட்டியெழுப்ப முடியும் என்கின்றனர்.

நான் ஐந்து ஆண்டுகள் உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளர் பதவியில் நிறைவேற்று அதிகாரியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு தொங்கு நிலைச் சபை ஒன்றினை நடத்தியுள்ளேன். பல தமிழ்க் கட்சிகளும் ஆதரவையும் ஒத்துழைப்பினையும் நல்கியுள்ளனர். ஆட்சிக்கு ஆதரவளித்தோர் தமது நலனுக்காக ஆதரவளிக்கவில்லை. சலுகைகளுக்காக ஆதரவளிக்கவில்லை. இந் நிலையில் எம்மை பிரதேச சபைக்கு அனுப்பிய மக்கள் மற்றும் தவிசாளராகத் தெரிவு செய்த ஏனைய கட்சிகளினது கௌரவ உறுப்பினர்கள், தவிசாளராக தெரிவு செய்த கட்சி என சகலரதும் கௌரவமும் நீங்கள் எழுந்தமானமாக முன்வைக்கும் விமர்சனங்களால் பாதிக்கப்படக்கூடாது. என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி தருவோம் என கூறி கதிரையை தக்கவைக்க கனவு காண்கிறது அநுர அரசாங்கம் என்கிறார் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி!



இலங்கையில் ஜேவிபி தோழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு தீர்வை முன் வைக்க முடியாத தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு இவ்வாறு தீர்வை பெற்று தருவார்கள் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் பொதுச்செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்த நடராஜா குற்றம் சாட்டினார்.

நாட்டின் பிரதமர் ஹரிணி அமர சூரிய யுத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை உள்ளூர் பொறிமுறையின் மூலம் பெற்றுத் தருவதாக தெரிவித்த கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் தற்போதைய பிரதமர் ஹரிணி அமர சூரிய யாழ்ப்பாணத்திலும் தென் இலங்கையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் பொறிமுறையின் மூலம் தீர்வைத் தரப்போவதாக ஊடகங்களில் கருத்துக்களை அவதானித்தோம்.

இறுதி யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்த நிலையில் இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களை இராணுவத்திடம் விசாரணைக்காக கையில் கொடுத்தோம் இன்று வரை அவர்களுக்கு என்ன நடந்தது என அவர்களைத் தேடி அலையும் உறவுகளுக்கு தெரியாது.

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என வீதி வீதியாக பல போராட்டங்களை உறவுகள் மேற்கொண்டும் இன்று வரை பொறுப்பு கூற வேண்டியவர்கள் பதில் வழங்காது மௌனம் காத்து வருகின்றனர்.

இலங்கை அரசாங்கம் உள்ளூர் விசாரணை மூலம் தீர்வை தருகிறோம் என காலத்துக்கு காலம் மாறி வரும் அரசாங்கங்கள் வாக்குறுதிகள் வழங்கி வரும் நிலையில் அதனை நாம் துளியளவும் ஏற்கவில்லை.

நாம் உள்ளூர் விசாரணைகளை ஏற்க மாட்டோம் என ஜெனிவாவில் தெளிவாக கூறியது மட்டுமல்லாது சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமாகவே எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்று தர முடியும் என முழுமையாக நம்புகிறோம்.

தற்போது பதவியில் உள்ள தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜேவிபி அரசாங்கம் அதன் பிரதமர் உள்ளூர் விசாரணை மூலம் தீர்வை பெற்று தரப் போகிறோம் என கூறுவது அவர்கள் தமது கதிரைகளை தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியாகவே பார்க்கிறோம்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை உள்ளூர விசாரணை மூலம் பெற்று தருவோம் எனக் கூறினார்கள் நாங்கள் அதை ஏற்கவும் இல்லை அது சாத்தியப்படாது என்பதும் எமக்கு நன்கு தெரியும்.

ஏனெனில் நாம் ஐநா மனித உரிமை பேரவைக்கு செல்லும்போது சகோதர இனத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் ஒரே குடும்பத்தில் நான்கு பேர் காணாமல் போன ஜேவிபி பெண்மணியும் ஐநாவில் நீதி கேட்டு அடிக்கடி வருகை தருகிறார்.

இதையே ஏன் நான் கூறுகிறேன் என்றால் தற்போது ஆட்சியில் உள்ள கேவிபி அரசாங்கம் இலங்கையில் தமது தோழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு தீர்வை பெற்றுத்தர முடியாத காரணத்தால் அவர்கள் இன்றும் ஐநாவில் நீதி கோரிச் செல்கிறார்கள்.

ஜேவிபியின் செயற்பாட்டாளர்களான லலித் குகன், யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் இன்று வரை குற்றவாளிகள் யார் என அரச உயர் மட்டம் வரை தெரிந்த நிலையில் அவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஜேவிபியாக முன்னர் செயல்பட்ட தமது தோழர்களுக்கான லலித் குகன் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு என் நீதியை பெற்றுக் கொடுக்கவில்லை என கேட்க விரும்புகிறேன்.

ஆகவே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது தோழர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு கூட நீதியைப் பெற்றுத் தராத அரசாங்கமாக காணப்படுகின்ற நிலையில் தமது பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக கடந்த அரசாங்கங்களை போல பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றும் ஒரு நாடகத்தை மேற்கொண்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம் எதற்கு வாக்களிக்க வேண்டும் என்பதிலும் எமக்கு நிதானம் தேவை என வேண்டுகின்றார் பொ.ஐங்கரநேசன்



தமிழ்க் கட்சிகள் எல்லாமே உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுவருகின்றன. ஜே.வி.பியை மாத்திரம் அல்ல தென்னிலங்கைக் கட்சிகள் எதையுமே நாம் ஆதரிக்க முடியாது. தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம் எதற்கு வாக்களிக்க வேண்டும் என்பதிலும் எமக்கு நிதானம் தேவை. தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரப் பண்டமாக்கி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலி வடக்கு பிரதேசசபைக்கு சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் கூட்டம் 16.04.2025 அன்று மல்லாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஜனாதிபதித் தேர்தலின்போதும் பாராளுமன்றத் தேர்தலின்போதும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களில் கணிசமானோர் ஜே.வி.பி என்னும் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள், தமிழ்த் தேசிய அரசியற் பயணத்தில் ஒரு பின்னடைவாக வடக்கு கிழக்கில் ஜே.வி.பி காலூன்றியமைக்கு எமது வாக்காளர்களைக் குற்றம் சாட்டுவது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. எங்கள் கைவிரல்களாலேயே எங்கள் கண்களைக் குத்துவது போன்று தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளே தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளுக்குத் தமிழ் மக்களை வாக்களிக்கப் பழக்கினார்கள்.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறுத்தப்பட்டவுடன் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் வரலாற்றுப் பிழையான முடிவை எடுத்தார். முள்ளிவாய்க்கால்வரை யுத்தத்தை முன்னின்று நடாத்திய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்களை அவர் வாக்களிக்க வைத்தார். இதன் மூலம் போர்க்குற்றவாளி என்ற குற்றச்சாட்டிலிருந்து நாமே அவரை விடுதலை செய்தோம். இதன் விளைவாகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எப்போதுமே எதிரான நிலைப்பாடுகளை எடுத்து வந்த ஜே.வி.பிக்கு இன்று தமிழ் மக்கள் வாக்களிக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

எம் மத்தியிலுள்ள பல தமிழ்க் கட்சிகள் உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசுவனவாகவும் மனதளவில் பேரினவாதக் கட்சிகளை விசுவாசிப்பனவாகவுமே உள்ளன. மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களை இலஞ்சமாகப் பெற்றும், பன்னாட்டு நிறுவனங்களிடம் பல கோடிகளைப் பெற்றும், மத்திய அரசின் பாதீடுகளை ஆதரித்தும் தமிழ்த் தேசிய விரோத நிலைப்பாடுகளை எடுப்பதற்கு இக்கட்சிகள் ஒருபோதும் தயங்கியதில்லை. தமிழ் மக்கள் இத்தேர்தலில் தென்னிலங்கைக் கட்சிகளோடு இப்போலித் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் சேர்த்தே நிராகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# Boxgrove Seniors Community Wellness Club அமைப்பு நடத்திய புத்தாண்டு விழாவில் சமூகப் பணியாற்றும் சிலருக்கும் கௌரவம்

கனடிய செய்திகள்
Canadian News

- சத்தியன்

மார்க்கம் நகரில் பல ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிய வண்ணம் தமிழ் பேசும் முதியோர்களுக்கான சேவைகளை வழங்கி வரும் Boxgrove Seniors Community Wellness Club அமைப்பு நடத்திய புத்தாண்டு விழா 16-04-2025 அன்று புதன்கிழமையன்று மார்க்கம் நகரில் உள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான அங்கத்தவர்கள் அங்கு ஆர்வத்துடன் வருகை தந்து அங்கு இடம்பெற்ற பாடல் மற்றும் வயலின் இசை மற்றும் பொன்னையா விவேகானந்தன் அவர்களது உரை ஆகியவற்றை கேட்டு மகிழ்ந்து கலைஞர்களைப் பாராட்டினார்கள்.

மேற்படி விழாவிற்கு அமைப்பின் தலைவர் திருமதி சுந்தரேஸ்வரி தலைமை தாங்கினார்.

இந்த விழாவில் சமூகப் பணியாற்றும் சிலருக்கு அவர்களை அங்கு அழைத்து உரிய கௌரவம் வழங்கப்பெற்றது.

விரிவுரையாளர் பொன்னையா விவேகானந்தன். உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம். கிறீன்பொறோ முதியோர் நலன்பேணும் அமைப்பின் தலைவி திருமதி செல்வா அருள்ராஜசிங்கம். மாகாண பாராளுமன்ற உறுப்பினர் போல் கலேன்றிரா அவர்களின் அலுவலக உத்தியோகத்தர் திருமதி கௌசல்யா சசி. மார்க்கம் முதியோர் சங்கத்தின் தலைவர் சுந்தரலிங்கம் மற்றும் வயலின் மற்றும் நடனக் கலைஞர் இளையவர் கிசோறி ராஜ்குமார் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் ஹுநநியம வுயடசநதய உட்பட சிலர் மேற்படி கௌரவங்களைப் பெற்றார்கள்.

பொன்னையா விவேகானந்தன் அவர்களது புத்தாண்டு பற்றிய உரை தமிழ் மொழியின் சிறப்பையும் அதன் தொன்மையையும் பற்றியதாக அமைந்து பலரையும் கவர்ந்தது என்றால் அது மிகையாகாது.









20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
Cr362,358,364,190,208,307,337,5705,290,391,406,210,338,346,324,202,217,195,231,211,154,339,513,
372,148,413,465,553,293,188,270,288,295,305,251,329,335,363,384,393,410,42,385,386,431

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8



# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியலைப் பேசலாமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசிய அரசியலைப் பேசத் தேவையில்லை. அங்கு இனப்பிரச்சினை பற்றிய உரையாடலுக்கு அவசியம் இல்லை என்ற ஒரு விளக்கம் பொதுவாகக் காணப்படுகிறது. இது சரியா? இல்லை. நிச்சயமாக இல்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தல் களம் எனப்படுவது உள்ளூர் நிலவரங்களைப் பிரதிபலிப்பது; உள்ளூர் உணர்வுகளைப் பிரதிபலிப்பது; உள்ளூர்த் தலைமைத்துவத்தைக் கட்டி எழுப்புவது; என்பதெல்லாம் சரிதான். ஆனால் அங்கே தேசியவாத அரசியலுக்கு இடமில்லை அல்லது தேசியவாத அரசியலை அங்கே பேசக்கூடாது என்று கூறுவது தவறான தர்க்கம்.

இது தேசியவாத அரசியல் தொடர்பான விளக்கக் குறைவினால் முன்வைக்கப்படுகின்ற ஒரு தர்க்கமாகும். தேசியவாத அரசியல் என்றால் என்ன? ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாகத் திரட்டும் அரசியல்தான். ஒரு மக்கள் கூட்டத்தை எங்கிருந்து தேசமாகத் திரட்டுவது? மேலிருந்து கீழ்நோக்கியா அல்லது கீழிருந்து மேல் நோக்கியா? நிச்சயமாக கீழிருந்து மேல் நோக்கித்தான் அதைச் செய்ய வேண்டும். அப்படிப் பார்த்தால் கிராமங்களில் இருந்துதான். அதாவது அடிமட்டத்திலிருந்துதான் மேல் நோக்கி மக்களை ஒரு தேசமாகத் திரட்ட வேண்டும்.

அதன்படி கிராம மட்டத்திலிருந்து தான் தேசியவாத அரசியல் தொடங்குகிறது. கிராம மட்டத்தில் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் வேலைகளில் ஈடுபடுத்தவில்லையென்றால் அடுத்த கட்டமாக மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் அதைச் செய்ய முடியாது. எனவே தேசியவாத அரசியலின் தொடக்கப் புள்ளியே கிராமங்கள்தான். கிராம மட்டத்தில் அதற்கான தெளிவும் விளக்கமும் தேவையான கட்டமைப்புகளும் இருக்க வேண்டும்.

கிராம மட்டத்தில் தேசியவாத அரசியல் தொடர்பாக பொருத்தமான விளக்கங்கள் இல்லை என்றால், அது தேசிய மட்டத்தில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். உதாரணமாக கிராம மட்டத்தில் காணப்படும் சாதி, சமய, வட்டார, குறிச்சி உணர்வுகளை தேசிய மட்டத்துக்கு எடுத்துப்போக முடியாது. அதே சமயம் அதைக் கிராம மட்டத்திலேயே பேணவும் முடியாது. கிராம மட்டத்தில்தான் பால்நிலை அசமத்துவம், சாதி, சமய, உள்ளூர் அசமத்துவங்கள் ஆழமாகக் காணப்படும். அந்த அசமத்துவங்களை கிராம மட்டத்தில் நீக்கவில்லை என்றால் பின்னர் அதனை மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நீக்க முடியாது. அது மட்டுமல்ல அது தேசிய மட்டத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

உதாரணமாக மன்னாரில் சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மத முரண்பாட்டை இங்கு சுட்டிக்காட்டலாம். திருக்கேதீஸ்வரம் வளைவு தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடு தேசியமட்ட உரையாடலாக பின்னர் விரிவுபெற்றது. எனவே உள்ளூரில் காணப்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை முரண்பாடுகளை உள்ளூரிலேயே தீர்க்க வேண்டும்.

தேசியவாத அரசியல் என்பது ஒரு மக்களைத் தேசமாகத் திரட்டிக் கட்டுவது. ஒரு தேசத்துக்குள் காணப்படக்கூடிய சாதி, சமய, பிரதேச, பால்நிலை ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து எவ்வாறு அந்த மக்கள் கூட்டத்தை ஒரு பெருந்திரளாகக் கூட்டிக் கட்டுவது? ஒரே ஒரு வழிதான் உண்டு. ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில் அவர்களை ஒரு பெரிய திரளாகக் கூட்டிக்கட்டலாம். அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது அவர்களை ஒரு பெரிய திரளாகக் கூட்டிக் கட்டலாம். அதாவது ஒரு மக்கள் கூட்டத்தை அசமத்துவங்களின் மீது கட்டியெழுப்புவது தேசியவாத அரசியல் அல்ல. மாறாக ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில் அந்த மக்கள் கூட்டத்துக்குள் காணப்படக்கூடிய இன, மொழி, மதப் பல்வகைமையை ஏற்றுக்கொண்டு அப் பல்வகைமையின் மீது கட்டி எழுப்பப்படுவதுதான் தேசியவாத அரசியலாகும்.

எனவே இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் தேசியவாத அரசியலை கிராம மட்டத்திலேயே, அடிமட்டத்திலிருந்தே தொடங்க வேண்டும். எனவே கோட்பாட்டு ரீதியாகப் பார்த்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தேசியவாத அரசியலுக்கு இடமில்லை என்ற விளக்கம் தவறானது.

தேசியவாத அரசியல் என்பது தேசிய மட்டத்திலானது என்று விளங்கிக் கொள்ளப்படுகிறது. தேசிய அளவிலானது என்பதற்கு பதிலாக தாயக அளவிலானது என்பது விளங்கிக் கொள்ள அதிகம் இலகுவாக இருக்கும். இந்த விளக்கத்தின்படி தாயகத்தில் கீழிருந்து மேல் நோக்கி அதாவது கிராமங்களில் இருந்து தேசியவாத அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டும். எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் களம் எனப்படுவது தேசியவாத அரசியலுக்கும் உரியதுதான். அதேசமயம் உள்ளூர் அபிவிருத்தி தொடர்பில் பொருத்தமான பொருளாதாரத் தரிசங்களைக் கொண்ட உள்ளூர் தலைமைகளைக் கட்டியெழுப்ப வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளில் மட்டுமல்ல மாகாண மட்டத்திலும் அதாவது மாகாண சபைகளிலும் தேசியவாத அரசியலை அதாவது இனப் பிரச்சினையை அதிகம் குவி மையப்படுத்தக்கூடாது என்று ஒரு தர்க்கம் ஏற்கனவே முன் வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக விக்னேஸ்வரனின் தலைமையிலான வட மாகாண சபையின் தோல்விகளில் அதுவும் ஒன்றாகக் கூறப்படுகிறது. விக்னேஸ்வரனிடம் மாகாணம் தழுவிய தேசிய பொருளாதார திட்ட வரைவு எதுவும் இருக்கவில்லை என்பது வேறு விடயம். தமிழ்த் தேசியக் கட்சிகளில் பெரும்பாலானவற்றிடம் தேசிய அளவிலான பொருளாதாரத் தரிசனங்கள் இல்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனால் அதற்காக மாகாண சபைகளில் தேசியவாத அரசியலை விவாதிக்க கூடாது என்பது சரியல்ல. அது மக்களால் ஆணை வழங்கப்பட்ட, ஒரு கொஞ்சமாவது அதிகாரங்களைக் கொண்ட ஒரு சட்டமன்றம். அங்கேயும் அபிவிருத்தி தொடர்பாகத்தான் உரையாட வேண்டும். மாறாக தேசியவாத அரசியலை முன்னிறுத்தக்கூடாது என்றும் ஒரு தர்க்கம் முன்வைக்கப்படுகிறது. உண்மை. அங்கு அபிவிருத்தி அரசியலுக்கு போதிய அளவு கவனக்குவிப்பு இருக்க வேண்டும். ஆனால் அதற்காக தேசியவாத அரசியலை அங்கு விவாதிக்க கூடாது என்பது சரியல்ல. மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு சட்டமன்றத்தில் தான் தேசியவாத அரசியலை விவாதிக்க வேண்டும். மாகாண மட்டத்தில் தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டி எழுப்புவதற்கு அது அவசியம்.

அதே சமயம் அங்கே அபிவிருத்தி தொடர்பிலான தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலான பொருத்தமான பொருளாதாரத் தரிசனம் இருக்க வேண்டும். அரசியலில் தூய பொருளாதாரம் கிடையாது. அரசியல் பொருளாதாரம்தான் உண்டு. அரசியல் அதிகாரம் இல்லாமல் பொருளாதாரத்தை பற்றியும் அபிவிருத்தியைப் பற்றியும் உரையாட முடியாது. எனவே மாகாண சபைகளில் இனப்பிரச்சினை தொடர்பில் உரையாட வேண்டும். குறிப்பாக வடமாகாண சபை இன அழிப்பு தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானங்கள் முக்கியமானவை. அவற்றுக்கு மக்கள் ஆணை உண்டு.

எனவே இப்பொழுது நாம் தெளிவான ஒரு முடிவுக்கு வரலாம். உள்ளூராட்சி சபைகள் உள்ளூர் நிலவரங்களைப் பிரதிபலிப்பவைகளாக இருந்தாலும் அவை தேசியவாத அரசியலில் இருந்து பிரிக்கப்பட முடியாத மைக்ரோ கட்டமைப்புகள் ஆகும். தேசியவாத அரசியல் உள்ளூராட்சி சபைகளில் இருந்துதான் அதாவது கீழிருந்துதான் கட்டியெழுப்ப வேண்டும். ஒரு மக்கள் மத்தியில் தேசத் திரட்சியை ஏற்படுத்துவது என்பது கீழிருந்து மேல் நோக்கியதாகத்தான் அமையலாம். எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை தேசியவாத நோக்குக் கோணத்தில் இருந்துதான் அணுக வேண்டும். அங்கு பிரச்சார நடவடிக்கைகளையும் தேசியவாத நோக்கு நிலையில் இருந்துதான் முன்னெடுக்க வேண்டும்.

மாறாக, உள்ளூராட்சி சபைகள் உள்ளூர்த்தன்மை மிக்கவை என்பதனால் அவற்றிற்கு தேசியத் தன்மை இல்லை என்று கூறுவது தேசியவாத அரசியலுக்கு எதிரானது மட்டுமல்ல, தமிழ் மக்களின் தேசியவாத அரசியலை நீர்த்துப்போகச் செய்யும் உள்நோக்கமுடைய ஒரு பிரச்சாரம்தான். எங்கிருந்து தமிழ்த் தேசியக் கட்டமைப்புகளை கட்டியெழுப்ப வேண்டுமோ, அங்கிருந்து அதைச் செய்ய வேண்டாம் என்று கூறுவது.

கிராம மட்டத்தில் கட்டமைப்புகள் இல்லையென்றால் கட்சிகள் மாகாண மட்டத்திலும் தாயக மட்டத்திலும் பெரிய வெற்றிகளைப் பெற முடியாது. தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரசுக் கட்சிக்கு உள்ள முக்கியத்துவமே அதுதான். ஊர்களில் அக்கட்சி ஒப்பீட்டு ரீதியாக ஏதோ ஒு வலைப் பின்னலைக் கொண்டிருக்கிறது. அந்தத் துணிச்சலில்தான் சுமந்திரன் தனித்து நின்று தேர்தலில் வெல்வோம் என்று கூறி வருகிறார்.

தமிழரசுக் கட்சிக்குள் யாழ்ப்பாணத்தின் ஒரே நாடாளுமன்ற உறுப்பினராகிய சிறீதரனின் பலம் கிளிநொச்சியில் அவருக்குள்ள கிராமமட்ட வலைப் பின்னல்தான். ஆயுத மோதலுக்கு பின்னரான வன்னிப் பெருநிலத்தின் சமூகச் சூழலும், வன்னியின் விவசாய மையக் கிராமியக் கட்டமைப்பும் அவருக்கு வசதியாகக் காணப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகளில் வடக்கு கிழக்கில் ஒப்பீட்டளவில் பரவலான வலைப் பின்னலைக் கொண்டிருப்பது தமிழரசுக் கட்சிதான். கிழக்கில் ஏனைய எல்லாக் கட்சிகளோடும் ஒப்பிடுகையில் தமிழரசுக் கட்சிக்கு கிராம மட்ட வலைப் பின்னல் பலமாக உண்டு.

மட்டக்களப்பில் பிள்ளையான் பிரதேச உணர்வுகளை மையமாக வைத்து கிராமமட்ட வலைப் பின்னலைக் கட்டியெழுப்பினார். அவர் அண்மையில் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவர் மட்டக்களப்பில் கிராம மட்டங்களில் கட்டமைத்து வைத்திருக்கும் கட்சி வலைப் பின்னலானது வடக்குக்கு எதிரான பிரதேச உணர்வுகளை அடித்தளமாகக் கொண்டது என்ற குற்றச்சாட்டு உண்டு. தமிழ்த் தேசியவாத நோக்கு நிலையில் அது ஆபத்தானது. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவதற்கு எதிரானது. அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவதற்கு எதிராகச் செயல்படும் சக்திகளுக்குத் துணை போவது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அது தோற்கடிக்கப்பட்டிருந்தாலும். அத்தோல்வியானது சிறிய வித்தியாசத்தில் கிடைத்த தோல்வி.

எனவே கிராமமட்ட வலைப்பின்னல் பலமாக இருக்கும் கட்சிதான் தேசிய மட்டத்திலும் பலமான வாக்கு வங்கியைக் கொண்டிருக்கும். இந்த அடிப்படையில் பார்த்தால், கிராம மட்டத்தில் எப்படிப்பட்ட ஒரு வலைப் பின்னலைக் கட்டியெழுப்பப் போகிறோம் என்பதுதான் இங்கு முக்கியமானது.

எனவே ஒரு மக்களை தேசமாகத்திரட்டும் தேசியவாத அரசியலானது கிராமங்களில் இருந்துதான் தொடங்குகின்றது. அந்த அடிப்படையில் கூறின், அதை உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இருந்தே தொடங்க வேண்டும். கிராமங்களில் தொடங்கி மாவட்ட, மாகாண, தாயக மட்டங்களுக்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கி தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட வேண்டும்.

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly - Brampton

## பெரியவெள்ளி–உயிர்த்தெழுந்த ஞாயிறு - GOOD FRIDAY & EASTER

**மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன். – வெளிப்படுத்தினவிசேஷம் 1: 18**

### அன்பான வாசகப் பெருமக்களே!

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோஅவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தைஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடையகுமாரனை (இயேசுவை) உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரைஅனுப்பினார். –யோவான் 3: 16

பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவரான இயேசு, இவ்வுலகிற்கு மானிடனாய் மனுவுரெடுத்து வந்து சகல மனுக்குலத்தின் பாவங்களுக்காக ஒரேபலியாக கல்வாரிச் சிலுவயிலே தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். மரித்த இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து மனிதசமுதாயத்திற்கு இலவசானதும் இலகுவானதுமான இரட்சிப்பை பெறும் வழியை ஏற்படுத்தினார்.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து (இயேசு) நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலேநாம் இரட்சிக்கப்படுவது அதிகநிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிகநிச்சயமாமே.– ரோமர் 5: 8–10

### அன்பானவர்களே!!

இயேசுவின் பிறப்பு, உலகசரித்திரத்தையே இரண்டாகப் பிரித்து“கிறிஸ்துவிற்குமுன் – கிறிஸ்துவிற்குப் பின்”என்று முழு உலகமே வருடங்களை கணக்கிடுவதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறுதலிக்கவோ, புறக்கணிக்கவோ, எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் உபயோகத்தில் இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இது தேவனால் உண்டானதென்பதும், இயேசுதாமே இவ்வுலகிற்கு மனுவுருவெடுத்து வந்ததெய்வம் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

### மேலும் அன்பானவர்களே!!

எங்கள் ஒவ்வொருவருடைய பாவங்களுக்காக பரலோகதிதிலருந்து இறங்கி மனுஷனாக அவதரித்து தன் இரத்தம் முழுவதையும் விரயமாகக் கொடுத்து, பலியாகி மரித்து, தெய்வீக லட்சணங்களின்படி மூன்றாம்நாள் உயிரோடு எழுந்த அந்த ஒரேபரிசுத்த தெய்வமாகிய இயேசுகிறிஸ்துவை உங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு பாவம் நீங்கி, சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ உங்கள் ஒவ்வொருவருக்காகவும் இறை ஆசிவேண்டி நிற்கிறோம். இயேசு மட்டுமே எமதுபாவங்களை மன்னிக்கஅதிகாரம் உள்ளவர். இயேசு நல்லவர். இயேசு ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். நாம் உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறோம்.

கர்த்தர் (கடவுள்) உருக்கமும், இரக்கமும், நீடியசாந்தமும், மிகுந்தகிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார், என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாகநமக்குச் செய்யாமலும், நம்முடையஅக்கிரமங்களுக்குத் தக்கதாகநமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ,அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல,கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவு கூருகிறார். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற் போயிற்று, அது இருந்த இடமும் இனி அதை அறியாது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்யநினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார், அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.– சங்கீதம் 103: 8–19

**“கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளை யோசிந்தித்துக் கொண்டிருங்கள்.”– பிலிப்பியர் 4: 8**

**இயேசுவின் உயிர்தெழுந்த நன்நாள் வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக.**

**பாஸ்டர் அல்பிரட் செருபிம்**

**மீட்பர் கிறிஸ்து சபை – Brampton – (647) 271-7645**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தெற்கில் ரணில் என்னும் ஒரு "கொலைவெறியன்" கிழக்கில் பிள்ளையான் என்னும் உயிர் பறித்த "மனிதப் பேய்"

## இன்று அந்த பிள்ளையான் உங்களுக்கு மண்டேலாவாக இருக்கலாம். ஆனால் எங்களுக்கு அவன் எப்போதும் கிட்லர்தான்.





இது ஒரு பழங்கதை என்று நாம் புறக்கணித்து விட முடியாதது. கொலைவெறியர்களது இரத்தக் கறைகளுக்குள் மறைந்த கிடக்கும் நீண்ட கொடுமைகளின் கதை. தமிழ்மக்கள் விடுதலை புலிகள் என்கிற முன்னாள் ஒட்டு குழுவின் தலைவன் பிள்ளையானின் கதை.

அவன் அண்மையில் ஒரு நாள் இலங்கை பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டான்.

கைதுசெய்யப்பட்டவுடன் அரச வாகனத்தில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். கண்களை கட்டவில்லை.கைகளை கட்டி வதைக்கவில்லை. குளிரூட்டப்பட்ட வாகனத்தில் பயணமாகிறான் பிள்ளையான்.

கைது செய்தவர்களயும் அறிய முடிந்தது. அழைத்துச்செல்லும் இடமும் அறிய முடிந்தது. அடித்து துன்புறுத்துவதில்லை என்றும் தெரிகிறது.

நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகிறான்.எதை விசாரிக்கிறார்கள் என்றும் தெரியும். எப்போது வரை விசாரிப்பார்கள் என்றும் தெரியும்.

தண்டனை என்னவென்றும் தெரியும்.யார் தண்டனை கொடுப்பார்கள் என்றும் தெரியும்.

முன்னைநாள் அமைச்சர் உதய கம்பன்பில அந்த பிள்ளையானை சிறையில் சந்திக்க அவகாசம் கோருகிறார். முன்னைநாள் ஜனாதிபதி ரணில் சந்திக்கவும் அவகாசம் கோருகிறார். முன்னைநாள் இராணுவ புலனாய்வு பிரதானியும் பிள்ளையானை சந்திப்பதற்காக விண்ணப்பம் செய்கிறார்.

அரச தரப்பில் இருந்து முன்னைநாள் அமைச்சர் உதயகம்பன்பிலவுக்கு அந்த பிள்ளையானை சந்திக்க அனுமதியும் கிடைக்கிறது.

ஆனால்,கடந்த காலங்களில் பிள்ளையான் பலரை கடத்தினார்.

ஏன் கடத்துகிறார் என்று தெரியவில்லை.எங்கே கொண்டு போகபோகிறார்கள் என்று தெரியவில்லை. எப்படி, எதைப்பற்றி விசாரிப்பார்கள் என்று தெரியவில்லை. தண்டனை என்னவென்றும் தெரியவில்லை. வீடு திரும்புவோமா என்பதே தெரியவில்லை.

வெள்ளை வேனில் கடத்தினார்கள். அணிந்திருந்த மேல் சட்டையால் கண்களை இறுக்கி கட்டினார்கள். கைகளை கட்டினார்கள். ஆடு மாடுகளை போல் பின் இருக்கையில் தள்ளிவிட்டார்கள்.

அந்த வாகனத்தை முன்னோக்கி ஓட்டினார்கள். பின்னோக்கி ஓட்டினார்கள். ஆடைகளை களைந்து அரைகுறையாக ஆக்கினார்கள்.

பல மணி தேரம் வாகனத்தை ஓட்டி, தலைசுற்றி, வாந்தி எடுக்கவைத்து உயிர் ஊசலாடும் நிலையில் எவருமே அறிந்திராத காடொன்றிற்குள் கொண்டு சென்று இறக்கினார்கள்.

மர நிழலில் படங்கொன்றை விரித்து அதன் மேல் அவர்களை அமர்த்தினார்கள். கைகளை பின்பக்கமாக இழுத்து கணுக்களில் கட்டினார்கள்.

ஆள் மாறி ஆள், அடிக்க தொடங்கினார்கள். கையில் கிடைத்த பொல்லுகள், இரும்பு கம்பிகள், துடுப்பாட்ட மட்டைகள், விக்கட்டுகள் என பலவற்றாலும் தங்கள் வலிமைக்கேற்ப அடித்தார்கள்.

மண்டைகள் பிளந்தன, முக தாடைகள் உடைந்தன, கால் கை எடும்புகள் நொருங்கின.

ஒவ்வொருவரும் பதை பதைத்தார்கள். குருதி பீறிட்டு பாய்ந்தது.மயங்கி விழும் வரைக்கும் அடித்தார்கள். பின் தண்ணீரை முகத்தில் தெளித்து உணர்வு வந்தபின் மீண்டும் அடித்து நொருக்கினார்கள்.

கைதிகள் யாவரும் வாய்விட்டு அழுதனர். மரண ஓலம் எழுப்பினர். அடிக்கவேண்டாம் என்று இறைஞ்சினர்.

எனக்கு குடும்பம் இருக்கிறது, ....பிள்ளைகள் இருக்கிறார்கள்....என்னை கொன்றுவிடாதீர்கள் என்று மன்றாடினார்கள்.

எனக்கு கடன் இருக்கிறது. என்னை கொன்றுவிட்டால் என் மனைவி நிர்க்கதியாகி போவாள். மனமிரங்குங்கள் என்று வேண்டினார்கள்.

பிள்ளையானின் சகாக்கள் எவருக்குமே இரக்கம் வரவில்லை. ஓயாமல் அடித்தார்கள். ஒப்பாரி சத்தம் முனகல் ஆகும் வரை அடித்து துவைத்தார்கள்.

பின் அனைவரையும் மணலில் இழுத்து எறிந்தார்கள். படங்கை ஆளுக்கொரு முனையில் பிடித்து சரித்து, வடிந்துகிடந்த இரத்தத்தைக் மணல்மேல் ஊற்றினார்கள்.

மீளவும் அதே படங்கை விரித்து,அந்த படங்குகளில் அவர்களை கிடத்தினார்கள். இரத்த வாடை கண்டு இலையான்கள் தேடிவந்து மொய்த்தன. வடிந்த குருதியையும் வடியாத கண்டலையும் தமது முக்கால் துளைத்து உறிஞ்சின. காதுகளில் போய் இரைந்தன.

அந்த இலையானகளை துரத்துவதற்கு கூட அவர்கள் நாதியற்று கிடந்தார்கள்.

அந்த நேரத்தில்தான் பிள்ளையான் அங்கு வந்தான். வெற்றி களம் ஒன்றில் மடிந்து கிடக்கும் எதிரிகளை பார்வையிடும் மன்னன் போல, இல்லாத நெஞ்சை நிமிர்த்தி நிமிர்த்தி சுத்திவந்தான்.

“எல்லாரையும் போடுங்க” என்று தீர்ப்பளித்து விட்டு நகர்ந்தான் அந்த பாதகன். ஏன் இவர்களை அடித்தீர்கள்? என்ன குற்றத்மை கண்டீர்கள்? என்று தன் தொண்டன் எவனிடமும் எந்த கேள்வியும் இல்லை.

மிருகமான அவனது தொண்டர்கள் குற்றுயிராய் கிடந்த அனைவரையும் வாகனமொன்றில் அள்ளி ஏற்றினார்கள்.

நள்ளிரவில் வாகனம் ஊர்மனை நோக்கி வரைந்தது.

நடு நகரில் அத்தனை கைதிகளையும் தூக்கி வீசினார்கள். சிலரது கழுத்துகளில் கத்தியால் குத்தி கொன்றார்கள். சிலரை துப்பாக்கியால் தலையில் சுட்டு கொன்றார்கள்.

வெடிச்சத்தம் கேட்டு ஊர்மக்கள் அமைதியாக இருட்டு அறைகளில் ஒதுங்கிகொண்டார்கள். நாய்கள்மட்டும் மடிந்துபோன அந்த அப்பாவிகளுக்காக ஓலமிட தொடங்கின.

பாதகர்களது வாகனம் காற்றில் பறந்து போனது.

ஏன் கொல்லப்படுகிறோம் என்று தெரியாமலே அந்த அப்பாவிகளது உயர்கள் ஓய்ந்து போயின.

அதிகாலை 5 மணிக்கு அந்த கிராமத்து மக்களின் பேரவலம் தொடங்குகிறது. தமது ஊர்ப்பிறந்த குழந்தைகள் தெரிவிலே பிணமாக கிடப்பது கண்டு ஆர்ப்பரித்து அழுகின்றனர் அப்பாவி மக்கள்.

பிள்ளையானின் குழுவினர் அதிகாலையில் அடுத்த ஊரில் அப்பாவிளை கடத்துவதற்கு தயாராகினர். மட்டக்களப்பில் உள்ள 800ற்கும் மேற்பட்ட கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு ஒருவரையேனும் பிள்ளையான் கொன்று தின்றிருப்பான். அவன் கொலை செய்யாத ஊர்களே இல்லை எனலாம்.

ஈழ விடுதலைக்காக போராடி கண்களை இழந்து, அவையவங்களை இழந்து காப்பகத்தில் வசித்த முன்னை நாள் சகாக்களான புலி வீர்ர்களையே கேள்விகள் ஏதுமின்றி கொன்று தீர்த்தவன் அவன்.


இத்தகைய கொலைகளை கண்டு பயந்து ஓலமிடும் மக்களால் கொலைஞர்களை நோக்கி சாபமிடகூட முடியவில்லை.

அப்படி யாரும் சாபமிட்டு அழுதுவிட்டால் மறுநாளே அவர் பிணமாகி போவார். இவ்வாறானா ஈவிரக்கமற்றவனாகவே அந்த பிள்ளையானும் அவனது சகாக்களும் இயங்கினர்.

அன்று பிள்ளையானின் தொண்டர்களாக இருந்த கொலைஞர்கள், இன்று பிள்ளையானின் கைதை சோகமாக தூக்கி கொண்டு, மண்டேலாவை கைது செய்துவிட்டதாகவே கூவுகின்றனர்.

இன்று அந்த பிள்ளையான் உங்களுக்கு மண்டேலாவாக இருக்கலாம். எங்களுக்கு அவன் எப்போதும் கிட்லர்தான்.

இந்த இயற்கை இந்த மண்ணில் எத்தனை காலம்தான் ஆனாலும் “எந்தவொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கத்தை” வழங்கியேதீரும். (முகநூல்ப் பக்கத்திலிருந்து “தேர்ந்தெடுக்கப்பட்டது)


கனடிய செய்திகள் Canadian News

# 2025 Annual Graceful Awards Gala, Hosted by Canadian Tamil Chamber of Commerce

- முயற்சி - வளர்ச்சி - எழுச்சி -

## "கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் எமது தமிழ்ச் சமூகத்தை இணைக்கும் பணிகளை மாத்திரமே ஆற்றிவருகின்றது" அதன் வருடாந்த விருதுகள் வழங்கும் விழாவில் மத்திய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி புகழாரம்
























**(மார்க்கம் நகரிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்)**

"கடந்த 30ஆண்டுகளுக்கு மேலாக கனடாவில் தமிழர் வர்த்தக சமூகத்தை உயர்த்துவதிலும் அவர்களை இணைப்பதிலும் கடுமையாக உழைத்து வரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் என்னும் பிரதான அமைப்பானது எமது தமிழ்ச் சமூகத்தை இணைக்கும் பணிகளை மாத்திரமே ஆற்றிவருகின்றது ஒழிய எமது சமூகத்தை பிரிக்கும் அல்லது சீர்குலைக்கும் வேலைகளைச் செய்வதில்லை அதற்காக நான் இந்த அமைப்பிற்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் இந்த மேடையிலே தெரிவிக்கின்றேன்".

இவ்வாறு கடந்த 12ம் திகதி சனிக்கிழமையன்று மார்க்கம் நகரில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற அதன் வருடாந்த விருதுகள் வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய கனடாவின் மத்திய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி புகழாரம் சூட்டினார்.

மேற்படி பிரமாண்டமான வைபவத்தில் சம்மேளனத்தின் தற்போதைய தலைவரும் கணக்காளருமான அரிகரன் தலைமை உரையாற்றினார். அவர் தனது உரையில் கனடாவில் தமிழர் சமூகத்தில் முக்கிய ஒரு சமூகம் சார்ந்த அமைப்பான கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் என்னும் அமைப்பின் தலைவராக உங்கள் முன் உரையாற்றுவதில் பெருமையடைகின்றேன். இந்த அமைப்பான வர்த்தகச் சமூகத்தின் மேம்பாட்டை மட்டுமே கருத்திற்கொண்டு செயலாற்றுவது மட்டுமன்றி முழுத் தமிழர் சமூகத்தின் தேவைகளை கருத்திற் கொண்டு செயற்பட்டு வருகின்றது என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பலரது உரைகளும் இடம்பெற்றன. அவற்றில் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினர் லோகன் கணபதி மற்றும் கணக்காளர் நிமால் விநாயகமூர்த்தி மற்றும் Chapel Ridge Funeral Home Group நிறுவனத்தின் தலைவர் Eric Tappenden ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

மேற்படி விழாவில் இவ்வருடத்திற்குரிய விருதுகள் 6 வெற்றியாளர்களுக்கு வழங்கப்பெற்றன.

சிறந்த வர்த்தக வெற்றியாளர் விருது பூரணகுமார் துரைசாமி அவர்களுக்கும், சிறந்த வர்த்தக பெண் வர்த்தக முயற்சியாளர் விருது வினோகா கண்ணன் அவர்களுக்கும், சிறந்த இளம் வர்த்தக வெற்றியாளர் விருது கஜன் நித்தியானந்தன் அவர்களுக்கும், சிறந்த சந்தைப்படுத்தல் வர்த்தக வெற்றியாளர் விருது பூரணி சொர்ணபால அவர்களுக்கும், இவ்வருடத்தின் தலைவர் விருது தேவதாஸ் சண்முகலிங்கம் அவர்களுக்கும், சிறந்த சமூக சேவையாளர் விருது தம்பையா ஸ்ரீபதி அவர்களுக்கும் வழங்கப்பெற்றன.

மேற்படி விழாவில் உள்ளூர் கலைஞர்கள் பலருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் அன்றை விருது விழா மேடையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் இணைந்து திரட்டிய 1 மில்லியன் கனடிய டாலர்களுக்கும் அதிகமான தொகைக்கான காசோலை கனடிய தமிழர் சமூக மையத்திற்கு வழங்கப்பெற்றது குறிப்பிடத்க்கது.

## ஒன்றாறியோ அரசு 300,000 கூடுதல் குடியிருப்பாளர்களுக்கு குடும்ப மருத்துவர் அல்லது முதன்மை பராமரிப்பு வழங்குநர் ஆகியோரின் பராமரிப்பு திட்டத்தை விரிவுபடுத்துகிறது




ஒன்றாறியோ அரசு 328,000 பேரை முதன்மை பராமரிப்பு குழுக்களுடன் இணைப்பதற்காக $110 மில்லியனுக்கும் மேல் முதலீடு செய்கிறது. இதன் மூலம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் குடும்ப மருத்துவர் அல்லது முதன்மை பராமரிப்பு வழங்குநர் கிடைப்பதை உறுதி செய்யும் இலக்கை நெருங்குகிறது. இந்த முயற்சியில், குடும்ப மருத்துவர்கள், செவிலியர் பயிற்சியாளர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் பிற சுகாதார நிபுணர்களை உள்ளடக்கிய 78 இடைத்தொழில்முறை முதன்மை பராமரிப்பு குழுக்களை உருவாக்குதல் மற்றும் விரிவாக்குதல் அடங்கும். இந்த விரிவாக்கம், ஒன்றாறியோவின் முதன்மை பராமரிப்பை வலுப்படுத்துவதற்கும், மாகாணம் முழுவதும் சுகாதார முடிவுகளை மேம்படுத்துவதற்கும் உள்ள பரந்த அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்.

அமைச்சர் விஜய் தணிகாசலம் இந்த முதலீட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, "இந்த நிதியுதவி, பல ஒன்றாறியோவாசிகளுக்கு அவர்களுக்குத் தேவையான பராமரிப்பு, அவர்களுக்கு தேவையான நேரத்தில், அவர்களின் சொந்த சமூகங்களிலேயே கிடைப்பதை உறுதி செய்யும்" என்று கூறினார். இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றம், ஒன்றாறியோவின் மக்கள் அனைவருக்கும் எளிதில் அணுகக்கூடிய மற்றும் இணைக்கப்பட்ட சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.

NISSAN | VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




RE-ELECT **JEAN YIP**
SCARBOROUGH-AGINCOURT

- ஜீன், தேர்தல் எல்லை மாற்றங்களின் போது ஸ்கார்பரோ-அஜின்கோர்டின் தனித்துவம் மற்றும் தொகுதியின் அடையாளத்தை சிறப்பாகக் காக்கும் பணியை செய்துள்ளார்.
- 2023-ஆம் ஆண்டு Bridletowne Neighbourhood Centre-க்கு கனடா மத்திய அரசின் $26.7 மில்லியன் நிதியை பெற்றுத் தந்தார்; 2025 மார்ச்சில் கூடுதலாக $9 மில்லியன் நிதியையும் பெற்றுள்ளார்.
- ஸ்கார்பரோ மெட்ரோ நீட்டிப்பு திட்டத்திற்கு $2.26 பில்லியன் நிதியை ஸ்கார்பரோ தொகுதி எம்.பிக்கள் பெற்றுத் தந்தனர்.
- ஸ்கார்பரோ-அஜின்கோர்ட் தொகுதியில், கனடிய பல் பராமரிப்பு திட்டத்தின் கீழ் 15,003 மக்கள் தற்போது பயனடைந்து வருகின்றனர்; மே மாதத்தில் இத்திட்டம் மேலும் விரிவடைய இருக்கிறது.
- ஸ்கார்பரோ-அஜின்கோர்ட் பகுதியில் Toronto காவல் துறையின் Neighborhood Community Officer திட்டத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

ஜீன் மற்றும் அவருடைய சக உத்தியோகஸ்தர்கள் எளிதாக அணுகக்கூடியவர்களாக மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராக உள்ளனர். ஜீன் அவர்கள் எங்கள் தேவைகளை நன்கு புரிந்தவராக, கலாச்சார வேறுபாடுகளை மதிப்பவராக, நாங்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை உணர்ந்து மக்களுக்காக நியாயமாக பேசுகின்ற பிரதிநிதியாக செயல்பட்டுவருகின்றார்.
ஜீன் அவர்கள் மக்களிடம் காட்டிவரும் அக்கறை, நேர்மை, தன்னலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் பல் கலாச்சார சமூகத்தை மதிக்கும் மனப்பான்மை என்பன அவர்களின் சிறந்த பண்பாகும் மக்கள் அனைவரின் தெரிவாக ஜீன் அவர்கள் தொடர்ந்து ஸ்கார்பரோ–எஜின்கோர்ட் தொகுதிக்கான சிறந்த மக்கள் பிரதிநிதியாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.
சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் பிரதம குரு, ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
- Dr. Sivasri Panchadchara Vijayakumara Kurukkal, Chief Priest, Varasiththi Vinayagar Hindu Temple




**VOTE EARLY**
ADVANCE POLLS

APRIL

| 18 | 19 | 20 | 21 |
| --- | --- | --- | --- |
| FRIDAY | SATURDAY | SUNDAY | MONDAY |

9:00 AM - 9:00 PM

SCAN HERE TO VISIT ELECTIONS.CA

Authorized by the Official Agent for Jean Yip.

Campaign Office:
11 Ivy Bush Ave
Scarborough, ON

**Need a ride to the polls?**
**Contact us!**

Phone: (647) 931-0755
Email: info@jeanyip.ca
Website: www.jeanyip.ca

# எமது ஸ்கார்பரோ–அஜின்கோர்ட் தொகுதிக்கான கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்ப்பாளரின்கொள்கை அறிவிப்புகள்

ELECT **Aris MOVSESSIAN**
Scarborough-Agincourt

- அமெரிக்காவின் நியாயமற்ற வரிகளுக்கு எதிராக போராடுதல் மற்றும் கனேடிய மக்களின் வேலைகளை பாதுகாத்து நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டுபாட்டில் எடுத்தல்.
- வருமான வரியை 15% குறைத்து, சராசரி தொழிலாளிகளுக்கு ஆண்டுக்கு $900 சேமிக்கவும், இரண்டு வருமானம் கொண்ட குடும்பங்கள் $1,800 சேமிக்கவும் உதவுதல்.
- மூத்த குடிமக்கள்
  - வரி விலக்குடன் கூ34,000 வரை சம்பாதிக்கவும்,
  - 73 வயது வரை ஓய்வூதிய சேமிப்புத் (சுசுஞ) பங்களிப்பு நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கவும்,
  - ஓய்வூதிய வயதை 65 ஆக உறுதிப்படுத்தவும் உதவுதல்.
- புதிய வீடுகளுக்கான மத்திய விற்பனை வரியை $1.3 மில்லியன் வரை குறைத்து, வீடு வாங்குபவர்களுக்கு $65,000 வரை சேமிக்கவும் உதவுதல்.
- மோசமான குற்றவாளிகள் மீண்டும் ஒருபோதும் சுதந்திரமாக நடக்காமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் கனடியரக்ளின்பாதுகாப்பை கவனித்தல்.

**"எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி மாற்றத்திற்காக வாக்களியுங்கள்! Aris Movsessian அவர்களுக்கு வாக்களியுங்கள்!"**

www.arismovsessian.ca info@arismovsessian.ca
(416) 477-9933
Unit 5-2950 Birchmount Rd, Scarborough, M1W 3G5



Authorized by the Official Agent of Aris Movsessian.



## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24



## On April 28, re-elect
# Salma Zahid
Scarborough Centre - Don Valley East

Cut taxes for middle class families

Build 500,000 new homes you can afford

Build fastest growing economy in G7



**CANADA STRONG**

/SalmaZahid15 /SalmaZahidMP

Authorized by the Official Agent for Salma Zahid




# RE-ELECT GARY ANANDASANGAREE

SCARBOROUGH—GUILDWOOD—ROUGE PARK

416-584-VOTE (8683)
VoteforGaryA@gmail.com

Liberal

CANADA STRONG

- கனடாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, அநீதியான வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து வலுவாக எழுவோம்
- ஒரு நாளுக்கு $10 சிறுவர் பராமரிப்பு
- காப்புறுதி செய்யப்படாதவர்களுக்கான பற்சிகிச்சைப் பராமரிப்புத் திட்டம்
- 65+ RRIF திரும்பப் பெறுதல்களைக் குறைத்து, ஒரு வருடத்திற்கு உத்தரவாத வருமான துணைத் தொகையை 5% அதிகரித்து முதியோருக்கு ஆதரவளித்தல்
- மலிவானதும், அணுகக்கூடியதுமான வீடமைப்பு
- வலுவான எல்லைகளும், பாதுகாப்பான சமூகங்களும்

## வாக்களிப்பதற்கான வழிகள்

**APR 28**
தேர்தல் நாள்
ஏப்ரல் 28
காலை 9:30 முதல்
இரவு 9:30 வரை

**APR 18, 19, 20, 21**
முற்கூட்டிய வாக்களிப்பு
ஏப்ரல் 18, 19, 20, 21
காலை 9 முதல்
இரவு 9 வரை

**IN-PERSON**
நேரில்
Elections Canadaவில்
ஏப்ரல் 22 ஆந் திகதி
மாலை 6 மணிக்கு முதல்

Authorized by the Official Agent for Gary Anandasangaree

மேலதிக தகவல்களுக்கு Elections.ca யைப் பார்வையிடுங்கள்.

கனடிய செய்திகள்
Canadian News

# இந்த வாரம் 18 வெள்ளிக்கிழமை மற்றும் 19 சனிக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் ஸ்காபுறோ நகரில் குரு யோகராஜா மற்றும் நண்பர்கள் இணைந்து நடத்தும் ‘‘OLD IS GOLD’’ மாபெரும் மெல்லிசை விழா















“எனது தந்தையார் ரிஎம். சௌந்தரராஜன் அவர்களுக்கும் அவரது பாடல்களை தொடர்ச்சியாக மேடைகளில் பாடிவரும் எனக்கும் கனடா வாழ் தமிழ் ரசிகர்களும் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழ் ரசிகர்களும் தொடர்ச்சியாக வழங்கி வரும் பேராதரவிற்கு எனது நன்றி”.

15ம் திகதி செவ்வாய்க்கிழமை ஸ்காபுறோ நகரில் எக்ளிங்கரன்-கென்னடி சந்திப்புக்கு அருகில் அமைந்திருக்கும் TIMEOUT DINE IN AND TAKE OUT (416) 265-5556) உணவக மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி 'OLD IS GOLD' மாபெரும் மெல்லிசை விழா. தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் நெகிழ்ச்சியோடு உரையாற்றிய பிரபல பாடகர் மறைந்த ரிஎம். சௌந்தரராஜன் அவர்களின் புதல்வர் ரிஎம்எஸ். செல்வகுமார் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பை திரு. குரு யோகராஜா ஏற்பாடு செய்திருந்தார். கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் தொகுத்து வழங்கினார்.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் உட்பட பல ஊடகங்கள்-வானொலிகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கு மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார்கள். இங்குள்ள விளம்பரத்தைப் பார்த்து இரண்டு நாட்களில் ஒருநாளில் ரசிகர்கள் 'OLD IS GOLD' மாபெரும் மெல்லிசை விழாவை ரசித்து மகிழ அங்கு திரள வேண்டும் என அனைவரையும் அழைக்கின்றார் குரு யோகராஜா அவர்கள். தொடர்புகளுக்கு: (416) 564-9642

# டொனால்ட் டிரம்பின் கட்டண அச்சுறுத்தலானது ஒன்றாரியோ மக்களுக்கு "குழப்பம் மற்றும் நிச்சயமற்ற தன்மை" ஆகியவற்றை ஏற்படுத்தி வருகின்றது என்கிறார் மாகாணத்தின் ஆளுனர் நாயகம் அவர்கள்



“டொனால்ட் டிரம்பின் கட்டண அச்சுறுத்தலின் “குழப்பம் மற்றும் நிச்சயமற்ற தன்மை” ஆகியவை எமது ஒன்றாரியோ மாகாணம் வாழ் மக்களை அச்சுறுத்தி வருகின்றது. குறிப்பாக அவர்களுக்கு தங்கள் இருப்பு தொடர்பாகவும் கலக்கமடையச் செய்துள்ளது”.

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை 15ம் திகதி ஒன்றாரியோ மாகாண அரசின் பாராளுமன்றமான “குயின்ஸ்பார்க்” கில் தான் ஆற்றிய சிம்மாசன உரையில் மாகாணத்தின் ஆளுனர் நாயகம் தெரிவித்தார். செவ்வாய்க்கிழமை உரையில்-ஆளுனர் நாயகமான எடித் டுமண்ட் உரையாற்றினார் அத்துடன் மாகாண முதல்வர் டக் போர்ட் மற்றும் ஆளுனர் நாயகம் இருவரும் தமது உரையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அவர்களின் பெயரை பத்து சுமார் இருபது தடவைகள் குறிப்பிட்டும் கண்டித்தும் உரையாற்றினார்கள்.

மாகாணத்தின் ஆளுனர் நாயகம் எடித் டுமண்ட் தனது உரையில் பின்வருமாறு தெரிவித்தார். அவரதுஉரை துணிச்சல் நிறைந்ததாகவும் அமெரிக்க அதிபரை நேரடியாக கண்டிப்பது போன்றும் அமைந்திருந்தது.

அவர் தனது உரையில் தொடர்ந்து தெரிவித்ததாவது, “எல்லையின் தெற்கே, ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஒன்றாறியோவின் பொருளாதாரம் மற்றும் நமது தேசிய இறையாண்மையை வெளிப்படையாக நோக்கமாகக் கொண்டுள்ளார். நம் நாட்டை உடைக்க பொருளாதார சக்தியைப் பயன்படுத்துவதாக அவர் அச்சுறுத்தியுள்ளார்,” என்று ஒன்றாரியோவின் ஆளுனர் டுமண்ட், குறிப்பிட்டதுடன் மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்களின் அரசாங்கம் ஆற்றிய மற்றும் ஆற்றவுள்ள அபிவிருத்திகள் மற்றும் மக்கள் நலன் சேவைகள் ஆகியவற்றையும் தெரிவித்தார்.

இது நிச்சயமாக ஒருபோதும் நடக்காது. ஏனெனில் கனடா விற்பனைக்கு இல்லை. கனடா ஒருபோதும் 51 வது மாநிலமாக இருக்காது, “தொழிலாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்கள் புயலை வானிலைப்படுத்த உதவ உங்கள் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.”

பிப்ரவரி 27 தேர்தலில் இருந்து ஃபோர்டின் பிரச்சார முழக்கத்தை எதிரொலிக்கும் பேச்சு, “ஒன்றாறியோவைப் பாதுகாப்பதற்கும் கனடாவைப் பாதுகாப்பதற்கும் உங்கள் அரசாங்கம் அதன் உறுதியில் ஒன்றுபட்டுள்ளது.”

ஆனால் மூன்றாம் கால டோரிகள் கனேடிய பொருட்களான ஆட்டோக்கள், எஃகு மற்றும் அலுமினியம் ஆகியவற்றில் டிரம்ப்பின் 25 சதவீத கட்டணங்கள் காரணமாக “நாங்கள் சவாலுக்கு தயாராக இருக்க வேண்டும்” என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

“இப்போது, ஜனாதிபதி டிரம்பின் கட்டணங்களை எதிர்கொண்டு ஒன்றாறியோ மற்றும் கனடா ஆகியன இணைவதால், இந்த முன்னேற்றம் அவசர அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது”.

“ஜனாதிபதி டிரம்பின் கட்டணங்கள் அதிகபட்ச தாக்கத்தை எட்டுவதால், எங்கள் எல்லையில் ஒரு காலத்தில் சுதந்திரமாக அனுப்பிவைக்கப்பெற்ற பொருட்கள் மற்றும் சேவைகள் நிறுத்தப்படுகின்றன, இதனால் குழப்பம் மற்றும் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துகிறது.

கட்டணங்களுக்கான ஜனாதிபதி ட்ரம்பின் அணுகுமுறை ஒரு வார்த்தையில், குழப்பமானதாக இருந்தது. சில சமயங்களில் அவர் அவர்களை அக்கறையற்ற உறுதியுடன் பின்தொடர்ந்தார். ஜனாதிபதி ட்ரம்ப்நமது பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறைகளில் மற்றவர்களை விட சீரற்ற நோக்கத்தை எடுத்துக்கொள்கிறார், பெரும்பாலும் எதிரெதிர் அல்லது முரண்பாடான இலக்குகளையும் காலவரிசைகளையும் வழங்குகிறார். விளைவு: பரவலான பொருளாதார நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது அதற்காக, எமது ஒன்றாரியோ அரசாங்கமானது. கனடாவின் மாகாணங்களுக்கிடையில் நீண்டகாலமாக உள் வர்த்தக தடைகளை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது “ஜனாதிபதி டிரம்பின் கட்டணங்களை விட வேறுபட்டது அல்ல” என்று அழைக்கப்படுகிறது.

இது ஃபோர்டு மார்க் கார்னியின் கூட்டாட்சி லிபரல் அரசாங்கத்துடனும், நோவா ஸ்கோடியாவின் டிம் ஹூஸ்டன் போன்ற பிரதமர்களுடனும் நெருக்கமாக பணியாற்றியுள்ளது.

“அவை செலவுகளை அதிகரிக்கின்றன, மெதுவான வளர்ச்சி மற்றும் அன்றாடம், கடின உழைப்பாளி மக்களை அதிகரிக்கின்றன. அவர்கள் ஒன்றாறியோவின் பொருளாதாரம் அதன் முழு திறனை அடைவதை நிறுத்துகிறார்கள்,” என்று பேச்சு தெரிவித்துள்ளது.

இது ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திலிருந்து மதுவை விற்பனை செய்வதற்கான கட்டுப்பாடுகள் அல்லது தொழில்முறை சான்றுகளை அங்கீகரித்தல் போன்ற மதிப்பிடப்பட்ட வர்த்தக தடைகள், கனடாவின் பொருளாதாரத்திற்கு 200 பில்லியன் டாலர் இழந்த வாய்ப்புகள் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் அவை இருப்பதை விட கிட்டத்தட்ட 15 சதவீதம் அதிகமாகும்.

ஃபோர்டு சமீபத்தில் செய்தியாளர்களிடம் மற்ற மாகாணங்களை விட மற்ற நாடுகளுடன் வர்த்தகம் செய்வது பெரும்பாலும் எளிதானது என்று கூறினார்.

பிற மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் ஒன்றாறியோவில் ஒரே மாதிரியாக நடத்தப்படும், மற்ற மாகாணங்களும் அவ்வாறே செய்தால் சாத்தியமாகலாம்.

“பிற மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களிலிருந்து கடினமாக சம்பாதித்த சான்றுகள் தானாகவே அங்கீகரிக்கப்படும், கனடாவின் பிற இடங்களிலிருந்து மிகவும் திறமையான தொழிலாளர்கள் வேலையை விரைவாகப் பெற முடியும் என்பதை உறுதி செய்வது. அத்துடன் ஒன்றாறியோவிற்குள் புதிய ரயில் பாதைகள், நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய்களை வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் அனைத்தும் நேர்த்தியாக இடம்பெறவுள்ளது. அத்துடன்அமெரிக்காவை தவிர்த்து விட்டு உலகின் ஏனைய நாடுகளின் மின்சார வாகன உற்பத்தி முதலீட்டில் பல்லாயிரக்கணக்கான டாலர்களைப் பெறுவதற்கு ஒட்டாவாவில் உள்ள மத்திய லிபரல் அரசாங்கத்துடன் ஏற்கெனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ள டக்போர்ட் அவர்களின் அரசாங்கம், தொழில்துறையில் அதன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது” என்றும் ன்றாரியோவின் ஆளுனர் டுமண்ட், குறிப்பிட்டார்.

### வீணாவின் கவிக்கணை

நாம் இழந்த
பல விடயங்கள்
நம் மனதோடு
இருந்தாலும்கூட,
நாமும் ஓர் நாள்
நிமிர்ந்து,
சந்தோஷத்துடன்
வாழ்ந்திடுவோம்
என்று ஏதோ
ஒரு நம்பிக்கையில்
தான் அடுத்த அடியை
எடுத்து வைக்கிறோம்.


ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்
சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்
585 Middlefield Rd, Unit 1 & 2, TORONTO
(MIDDLEFIELD & FINCH) Tel: 416 535-6560
1009 நவோத்ர சகஸ்சிற
சங்காபிஷேக மணவாழக்கோல
27வது ஆண்டு பூர்த்தி பெருவிழா
01-05-2025 வியாழக்கிழமை காலை 9:00 மணிமுதல் விநாயகர் வழிபாடு ஆரம்பமாகி மாலை 5:00 மணிக்கு யாகபூஜை, மகாபூர்ணகுதி, வேததிராவிட பாராயணம், 1009 சங்காபிஷேகம் நடைபெறும். மாலை 8:30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, சுவாமி உள்வீதி திருவிழா நடைபெறும் 9:30 மணி பிரசாதம் வழங்கப்படும்.
அனைவரும் வருக – அன்னையின் அருள் பெருக
என்றும் இறைபணியில் ஆலய தர்ம கர்த்தா

இலங்கை செய்திகள் Sri Lanka News

**பு. கஜிந்தன்**

# யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஜனாதிபதியின் புதுவருட உரையை சிறப்பாக ஆற்றிய 8 வயது சிறுவன்!



13-04-2025 ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் புது வருட கொண்டாட்ட நிகழ்வு வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி பயிலும் சுதர்சன் அருணன் என்ற மாணவன் ஜனாதிபதியின் புதுவருட வாழ்த்து செய்தியை சிங்களத்தில் ஆற்றினார்.

இந்த கொண்டாட்டத்தில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என் பலரும் கலந்துகொண்டனர்.

இவ்வாறு சிங்களத்தில் உரையாற்றிய குறித்த மாணவனின் திறமையினை பலரும் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

**கனகராசா சரவணன்**

# பிள்ளையான் உதய கம்மன்பில சந்திப்பானது இலங்கையில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய ஒரு சதிதிட்டம் என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில அல்ல கம்மன்பிள்ளை பிள்ளையானுடன் சேர்ந்து இந்த நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதுடன் இருவரது செயற்பாடுகளின் பின்னால் பெரிய ஒரு சதிதிட்டம் இருப்பதாக கருதுகின்றோம் என தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

திசைகாட்டி சின்னத்தில் மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் புளியந்தீவு வட்டாரத்தில் போட்டியிடும் முத்துலிங்கம் துதீஸ்வரன் மற்றும் நித்தியானந்தன் நிருஷ்னி ஆகியோரின் தேர்தல் காரியாலய திறப்பு விழா 17ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்றது இதன்போது அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு இவ்வாறு தெரிவித்தார்.






உதய கம்மன்பில கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக செயற்படுகின்றார். இவர் பிள்ளையானை நேரடியாக சென்று சந்தித்தது தொடர்பாக ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

இந்த இருவருக்கும் இடையிலான உறவு என்பது கடந்த காலங்களில் உதயன் கம்பன்வில போன்றவர்கள் இனவாத ரீதியாக இந்த நாட்டை குழப்பும் செயற்பாடுகளை முன்னின்று செயற்பட்டவர்களின் முக்கியமாக கருதப்படுபவர் அவர் இன்று பிள்ளையானுடன் இணைந்து அவரது சட்டத்தரணியாக செயற்பட வந்திருப்பது என்பது ஒரு பெரிய சதித்திட்டத்தின் ஆரம்ப புள்ளியாக கருதுகின்றோம்.

இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவானது இந்த நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகம் எங்கள் மத்தியில் எழுகின்றதுடன் இனிவரும் காலங்களில் இவர்கள் தொடர்பான பல தகவல்கள் வெளியிடப்படும் அதேவேளை இவர்கள் இருவரது செயற்பாடுகளின் பின்னால் பெரிய ஒரு சதிதிட்டம் இருப்பதாக கருதுகின்றோம். அதேவேளை மக்கள் இவர்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று இடம்பெறும் கைதுகள் இவர்களால் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில ஊழல்கள் கொலை குற்றச்சாட்டுக்கள் போன்ற விடையங்கள் காரணமாக சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது எனவே எந்த ஒரு அரசியல் நோக்கத்துக்காவும் இவர்களை கைது செய்யப்படவில்லை இவர்கள் கடந்த காலங்களில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர் அதனை நிறைவேற்றவில்லை என பாராளுமன்றத்தில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர் இன்று அவர்களது குற்றச்சாட்டுக்கள் ஊழல்கள் வெளிவந்த பின்னர் மீண்டும் அழுகுரலை காணக் கூடியதாக இருக்கின்றதுடன் அரசாங்கம் எங்களை அரசியல் பழிவாங்கல் செய்வதாக அலறிக் கொண்டிருக்கின்றனர் இது ஒரு சட்டரீதியான நடவடிக்கை இது தொடர்பான தகவல்கள் வெளிவரும் என்றார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
aches
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Head-
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

## நனவாகும் கனவு

மா மா வீளம்
ஓலைக் குடிசை வாழ்ந்ததும்
ஓயா வறிமை கண்டதும்
சேலைத் தலைப்பில் துவட்டிய
சேராத் தலையைக் கோதியும்
மாலை, விடியல் ஆடியும்
மாயக் கனவில் ஓடியும்
சோலைக் குயிலின் மொழியுமே
சொந்தம் எனவே நம்பினேன்

ஊரை விட்டு விலகியும்
உயரச் செல்ல விரைந்ததும்
தாரைக் கண்ணீர் வடித்ததும்
தாயாம் ஊரைப் பிரிந்ததும்
போரின் கொடிய நிலைமையால்
போதாக் காலம் வந்ததால்
பாரில் இங்கு வந்துமே
பாசம் இன்றிக் கிடக்கிறோம்

என்றும் வாழ்வில் துன்பமே
என்று நினைந்த வேளையில்
இன்பம் ஒன்று உண்டென
இறைவன் வைத்த நியதியும்
அன்பின் வாழ்வு கண்டதும்
அருமை மக்கள் பெற்றதும்
துன்பம் தொடர்ந்த துயரதும்
துடைத்த இன்பம் வந்ததே


கணவர் இழந்த விதவையாய்க்
காதல் இன்றிக் கிடப்பினும்
மனதில் உறுதி கொண்டவள்
மகிழ்ச்சி பொங்க நிற்கிறேன்
குணமாய் மக்கள் நின்றனர்
குடும்பப் பேரன் வந்தனன்
தனமாய் நின்று வாழ்கிறான்
தானே என்னை ஆழ்கிறான்

நினையாக் காலம் வந்தது
நெஞ்சம் மகிழ்ச்சி கண்டது
கனவாய் நினைத்த நாட்களும்
கவிதை சொல்லி நின்றன
மனதின் துயரம் நீங்கிட
மகிழ்ச்சி வந்து துள்ளுதே
நனவாய் மாறி இன்பமும்
நன்மை தந்து நிற்குதே

நன்றாய்க் கூடிக் கேட்டவர்
நல்ல கவிதை தன்னையும்
மன்றில் அமர்ந்த அனைவரும்
மகிழ்வில் நன்றி சொல்கிறேன்
இன்றும் என்னில் காண்பது
இதயம் நிறைந்த மகிழ்ச்சியே
அன்பாய் கனவும் நனவென
அருமை வாழ்வைக் காண்பமே


*Dr. புட்பா கிறிட்டி (Canada)*


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216


WE INVITE YOU TO:
MOTHER'S day
C.Y.E.C.S
CENTER FOR YOUTH EMPOWERMENT AND COMMUNITY SERVICES
SUPPORTING YOUTH, STRENGTHENING MINDS, UPLIFTING COMMUNITIES
Celebrations, hosted by
'Centre for Youth Empowerment and Community Services'
We will honour and celebrate our
Dedicated and Deserved Mothers!
அர்ப்பணிப்பும் தகுதியும் கொண்ட அன்னையரைக் கௌரவிப்போம்!
Venue: Easttown Banquet Hall
2648 Eglinton Ave. East
Scarborough, ON M1K 2S3
Date: SUNDAY. MAY 11, 2025
from 11:00 AM to 2:00 PM
(Lunch from 1:00 PM to 1:30 PM)
CONTACT: info@cyecs.org / (647) 891-7725 or (647) 762-9512



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1142

## (வரலாறும் மரபும்)

## மன்றுளாடும் வதிரிபீட விநாயகஉ ஆலயம்

### கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்

*" திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும்- உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்*
*காதலால் கூப்புவர் தம் கை. "*

செந்தமிழும், சிவநெறியும் செழித்தோங்கி மிளிரும் யாழ்ப்பாணம், தமிழீழ தாயகத்தின் பிரதான நிலப்பரப்பாக மிளிர்கின்றது. இந்நகரின் தென்கிழக்கே ஞானியரும், வேதியரும், பாவலரும் நாவலரும், போற்றிப் புகழ்ந்த நற்பதியாக கொழும்புத்துறை திகழ்கின்றது. இங்கு, எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமான் விக்னங்கள் தீர்த்து மக்களை ஆட்கொண்டு வருகின்றார்.

அருள்மிகு மன்றுளாடும் வதிரிபீட விநாயகர் ஆலயம், எங்கள் குருநாதன் தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு முன்பாகவும், நாவலர் பெருமான் நற்றமிழில் நயந்துரைத்த சைவ வித்தியாசாலைக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது. இவ்விநாயகப்பெருமானை அன்பர்கள் பக்தி மேலீட்டால் உளமுருகிப் பல்வேறு திருப்பெயர்களால் அழைத்து மகிழ்வர். "இலந்தை நகரில் இலங்கும் விநாயகனே" என்றும் "மன்றுளாடும் விநாயகப்பெருமான்" என்றும் பன்னெடுங்காலமாக வாழ்த்திப் பாமாலைகள் பாடியுள்ளனர்.

எமது காலத்திலே வாழ்ந்து மறைந்த சித்தர்களுள் தவத்திரு யோகர் சுவாமிகள் மிகமிக முக்கியமானவர். மாவிட்டபுரத்திலே 1872 ஆம் ஆண்டு உதித்த யோகர் சுவாமிகள், கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து இப்புனித பதியிலேயே தமது வாழ்நாளைக் கழித்தவர். வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் ஆலயத்திற்கு எதிரே யோகர்சுவாமிகளின் ஆச்சிரமம் அமைந்திருப்பதோடு, தவத்திரு யோகர் சுவாமிகள் இவ்வாலயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராகவும் விளங்கியுள்ளார்.

இக்கோவிலிலே சிவராத்திரி தினத்தைச் சிறப்பாக அனுட்டிப்பதற்கும், மாத சிவராத்திரி சிறப்பாக நடைபெறவும் யோகர் சுவாமிகள் பல வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் அருகாமையிலுள்ள பழனியாண்டவர் கோவிலில் புராண படனங்கள் நடைபெறவும், கந்தப்புராணத்தை படிக்குமாறும் யோகர் சுவாமிகள் சிவபதம் அடைவதற்குச் சில நாட்களுக்கு முன் ஆலய அர்ச்சகர்களுக்கு அறிவுரை வழங்கியதாக இவ்வாலயங்களோடு தொடர்புடையோர் கூறியுள்ளனர். இதனடிப்படையில் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்புத்துறை மக்களோடு, நல்லூர் ஆதீனத்திலிருந்து பலரும் வந்து கந்தப்புராண படன படிப்பினைச் சிறப்பாக நடத்தும் வழக்கம் காணப்பட்டது.

இவ்வாலயத்திலே நடைபெறும் விழாக்களுள் நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள், மேன்மையான இரவுகள் எனப் பொருள்படும். இறைவனை அன்னையாக வழிபடுவதே சக்தி வழிபாடு. மனிதவாழ்க்கைக்கு அடிப்படையான வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றினையும் அருளும் சக்தியை வணங்கி வழிபடும் திருநாளாக நவராத்திரி விளங்குகின்றது. அத்தோடு விரதமாகக் கடைப்பிடித்து, விழாவாகக் கொண்டாடப்படும் விழாக்களுள் நவராத்திரி விழா சிறப்புடையது. இந்துமதத்திலே கும்பம் வைத்தல் பொதுவானதாகக் காணப்பட்ட போதிலும், சிறப்பாக நவராத்திரிபூசையைக் கும்பபூசை என்று அழைக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

மகிசம் என்ற அரக்ககுணத்தை அழித்து சாத்வீகத்தை அருளும் இவ்விழா இன்றைய காலப்பகுதிக்கும் மிகப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது. சாத்வீகம் நிலைகுலைந்து அரக்ககுணம் மேலோங்கி மக்களை அழிக்கின்ற இந்நாளிலே, மகிசாசுர சங்காரம் போன்றவை உயிர்ப்புள்ள விழாவாகவே கொள்ள வேண்டும். மனித மனங்களிலே சாத்வீக எண்ணங்கள் நிலவி, மகிசத்தனமான எண்ணங்கள் மறைய உதவும் இத்திருநாள் காலத்தின் தேவையாக இன்றும் கொண்டாடப்படுகின்றது.


நவராத்திரி காலத்திலே நடைபெறும் வன்னி வாழை வெட்டு இவ்வாலயத்திலே மிகச் சிறப்பாக நடைபெறும் ஒரு நிகழ்வாகக் காணப்படுகின்றது. வன்னி வாழைவெட்டு என்ற ஆழமான கருத்தினைக்கொண்ட பதம் மறைந்து பலர் கன்னிவாழைவெட்டு என்றும் வழங்கி வருகின்றனர். அன்னை பராசக்தி துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி வடிவங்கொண்டு ஒன்பது நாட்களிலும் அருள்புரிந்த அன்னையானவள், அர்த்தநாரியாகி பரம்பொருளுடன் ஒன்றாக இணையும் வெற்றித்திருநாளிலே, இறைவன் குதிரைவாகனத்திலேறி, வன்னி மரத்தின் மீது அம்பெய்வதான ஒரு ஐதீகம் பண்டு தொட்டு நிலவுகின்றது.

*வளரும்...*

உ

முத்தமிழ் குருமணி. கலைமாமணி. டாக்டர்
சாம்பசிவஸ்ரீ.சோமாஸ்கந்த குருஜீ அவர்களின் உருவாக்கத்தில்
1.மாணவர்வில்லுப்பாட்டு, 2. நினைவுப்பூக்கள் கவிதைத்தொகுப்பு
ஆகிய இரண்டு தமிழ்கலை நூல்கள்





வெளியீட்டு விழா

இடம்- கனடா .கந்தசாமி கோவில், 733.Birchmount Rd.scarboroch.
காலம். 03-05-2025 சனிக்கிழமை. மாலை 05.00 மணி
தலைமை- பேராசிரியர்.திரு.பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள்

-நிகழ்சிநிரல்-

மங்கள விளக்கேற்றல்... இறைவணக்கம்..
வரவேற்புரை.... சிவஸ்ரீ-ராம்.சர்வலோகேஸ்வரக்குருக்கள்
தலைமையுரை- பேராசிரியா.இ.பாலசுந்தரம் அவர்கள்
ஆசியுரை- கலாநிதி.சிவஸ்ரீ-நா.சோமாஸ்கந்த குருக்கள்
சிறப்புரைகள் 1. திரு.லோகன்.லோகேந்திரலிங்கம் (உதயன்பத்திரிகை)
2. திரு.கீதவாணி ராஜ்குமார் அவர்கள்.
3. திரு.துரை.உதயகரன் அவர்கள்.
வாழ்த்துரை-
ஆய்வுரைகள்-1. (மாணவர்வில்லுப்பாட்டு நூல் ஆய்வுரை)
திருமதி.கோதை அமுதன். அவர்கள்.
2. (நினைவுப்பூக்கள்.கவிதை நூல் ஆய்வுரை)
டாக்டர் திரு.போல் ஜோசப் அவர்கள்.

வெளியீட்டுரை- நூலாசிரியர் கலைமாமணி.டாக்டர்.எஸ்.எஸ்.குருஜீ
கௌரவப்பிரதி. சிறப்புப்பிரதிகள் வழங்கல்.
- நன்றியுரை.... குருஜீ. கோபிகிருஷ்ண சர்மன்.

அன்பர்கள், தமிழ்க்கலை ஆர்வலர்கள்.அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்

-இங்கனம்-
நூல்வெளியீட்டு ஏற்பாட்டாளர்கள்


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மத்திய அரசிடம் நிதி இருந்தால் மட்டுமே உள்ளூராட்சி அமைப்புகளுக்கு நிதி என ஜனாதிபதி பொய்யுரைப்பதால் அதிகாரப் பகிர்வு, உள்ளூராட்சி நிர்வாக முறை கேலிக்குள்ளாகிவிட்டது

## முன்னாள் தவிசாளர் நிரோஷ் விசனம் தெரிவிப்பு



உள்ளூராாட்சி மன்றங்கள் மத்தியில் ஆளும் கட்சியின் ஆளுகைக்குள் உள்ளூராாட்சி மன்றங்கள் இருந்தால் மட்டுமே மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும் தாம் நிதி ஒதுக்க முடியும் எனவும் தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி பேசுவதனால் அவர் அதிகாரப் பகிர்வையும் ஜனநாயக ரீதியில் உள்ளூராட்சி தத்துவத்தையும் மீறுகின்றார் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிதி விடயத்தில் அந்தந்த சபைகளின் தலைவர்களுக்கே அதிகாரம் காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் தங்கி வாழும் நிறுவனங்கள் அல்ல. உள்ளூராட்சி என்பது ஆட்சி முறைமை. அது வரிகளையும் வருமானங்களையும் திரட்டுவதற்கும் தீர்மானிப்பதற்கும் செலவிடுவதற்கும் அதிகாரம் பொருந்திய சட்ட ரீதியான ஆட்சி அலகாகும்.

உள்ளூராட்சி மன்றங்கள் உலகளவில் வரலாற்று ரீதியில் உருவாக்கப்பட்ட ஆட்சி முறை என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடம் இருந்து அதிகாரப்பகிர்வைப் பெற்றுள்ளன. ஜனநாயக மற்றும் சட்ட ரீதியிலான அந்தஸ்தாக உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இலங்கையிலும் அரசியலமைப்புச் சட்ட சரத்துக்களின் ரீதியில் உருவாக்கப்பட்ட சட்டங்களினால் அதிகாரத்தினைப் பெற்றுள்ளன. சட்டரீதியில் உள்ளராட்சி மன்றங்கள் சோலைலவரி, மாற்றம் ஆதனப் பெயர்மாற்றங்களின் போதான முத்திரைத் தீர்வை, நீதிமன்ற குற்றப்பணம், சேவைகளுக்கான அறவீடுகள், தண்டப்பணங்கள் என பல மில்லியன்களுக்கு உரித்தாளர்களாகவுள்ளன. வசதிக்குறைவான உள்ளூராட்சி மன்றங்களும் காணப்படுகின்றபோதும் அவ்வாறாக வசதிக்குறைவுக்கு மத்திய அரசின் எடுபிடியாக அல்லது ஆதிக்கத்தினுள் உள்ளூராட்சி மன்றங்கள் இருப்பது தீர்வல்ல.

மத்திய அரசாங்கம் சர்வதேசத்திடம் பெறும் அதிக உதிவிகள் மக்களின் நலன்புரி விடயங்களை மையமாகக் கொண்டுள்ளன. அந் நிதி உதவிக்கான முன்மொழிவுகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட சேவைப் பரப்புக் களாகக் காணப்படுகின்றன. மத்திய அரசாங்கம் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல்வேறுபட்ட சர்வதேச தாபனங்களிலும், நாடுகளிலும் இருந்து மானியங்களைப் பெறுகின்றது. அவ் உதவிக் கோரிக்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் செய்ய வேண்டிய சேவைப்பரப்புக்களை காரணங்காட்டியே உதவிகள் பெறுகின்றன. அவ்வாறு அரசாங்கம் பெறும் உதவிகளை ஜனாதிபதி தனது கட்சிக்காரரின் சபைக்கு மட்டும் தான் கொடுப்பேன் எனக் கூற முடியாது. அவ்வாறு ஜனாதிபதி செய்தால் உதவிகளை சர்வதேசம் வழங்காது. அப்படி அரசாங்கம் செயற்பட்டால் இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச கொடையாளர்களின் கவனத்திற்கு நாம் கொண்டு செல்ல முடியும். அதனால் நாட்டிற்கான சர்வதேச உதவிகளே தடைப்பட்டுவிடும். சர்வதேச உதவி தடைப்பட்டால் அது மத்திய அரசாங்கத்தின் இருப்புக்கே ஆபத்தாக மாறிவிடும். வெளிநாட்டு உதவிகளை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்கு தேவை முன்னுரிமை அடிப்படையில் அரசாங்கம் பகிர்ந்தே ஆகவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணியினருக்கான சம்பள விடயங்கள் மத்திய அரசு சார்ந்திருந்த போதும் அவற்றிற்கான மானிய உதவியை இன்றைய ஜனாதிபதி நினைத்தால் மாத்திரம் நிறுத்திவிட முடியாது. உத்தியோகத்தர்களின் நியமனம் மற்றும் சேவை அடிப்படையில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சட்டப் பாதுகாப்பும் தொழில் உரிமையும் உள்ளது. ஆகவே அரசாங்கம் போதையில் பேசுகின்ற தெருச் சண்டியர்கள் போல விலாசம் எழுப்பக்கூடாது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# காணி விடுவிப்பு தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரவிடம் கோரிக்கை வைப்பதற்காக வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட பொலிஸார்

காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைப்பதற்கான ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்ட சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் 17ம் திகதி வியாழக்கிழமைஅன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலிவடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாக அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது உயர் பாதுகாப்பு வலயம் எனவும் இங்கு கூட்டம் கூட முடியாது எனவும் ஊடக சந்திப்பு ஏற்பாட்டாளர்களுடன் பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முரண்பாட்டில் ஈடுபட்டார்.

தாம் எமது காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி ஊடக சந்திப்பை நடாத்தவே தாம் வந்ததாகவும் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்கி பெயர்களை பதிவு செய்த பொலிஸார் அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தவர்களை காணொளி மற்றும் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டனர்.

இவற்றை காணொளியை எடுத்த ஊடகவியலாளர்களையும் பொலிஸார் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் காணொளி எடுத்தனர்.

ஊடகவியலாளர் சந்திப்பை முடித்து விரைவாக செல்லுமாறு அங்கு வந்திருந்தவர்களுடன் பொலிஸார் தொடர்ச்சியாக தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் எதிர் காலத்தில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் காற்றலை மின் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்

## மன்னாரில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

- எஸ்.ஆர்.லெம்பேட் (17-04-2025)



மன்னாரில் கடந்த காலங்களில் சூழல் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் குறித்த திட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்,குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னார் பஜார் பகுதியில் 17ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரில் இருந்து தமிழ்நாடு, இராமேஸ்வரத்திற்கான பயணிகள் படகுச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மேலும் மன்னாரில் காற்றைக்கொண்டு மின் உற்பத்தி செய்யக்கூடிய வசதிகள் அதிகமாக காணப்படுகிறதன. ஆனால் கடந்த காலங்களில் சூழல் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல் குறித்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் குறித்த திட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

எதிர் காலத்தில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் எதிர்வரும் ஜூன் மாதம் முதல், மேலதிகமாக 4 லட்சம் நபர்களுக்கு அஸ்வஸ்ய நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





குறித்த கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகளின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வார ராசிபலன்

**18-04-2025 வெள்ளி தொடக்கம் 24-04-2025 வியாழன் வரையும்**





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவுகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்கள் ஏற்றம் பெறும். பாதிப்புகள் அகலும். பிரார்த்தனையால் பலன் உண்டு. தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை வளரும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். போட்டிகள் உருவாகி மறையும். பயணம் தவிர்ப்பது நல்லது. பொருளாதார ஏற்றம் பெறும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடவும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பங்குச்சந்தை லாபம் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,C




**ரிஷபம்:** சச்சரவுகள் அகலும் வாரம். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். குலதெய்வ வழிபாடு மேன்மை தரும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பண நடமாட்டம் கூடும். செய்த்தொழில் சிறப்படையும். இனிப்பான செய்திகள் வரும். நீண்ட நாளைய நோய் விலகும். வெளிநாட்டு தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். நலமே விளையும் இனிய வாரமாகும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். புதிய வேலை முயற்சி பலிதமாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்பு தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பாராட்டுக்கள் கூடும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. எண்ணங்கள் பலிதமாகும். தாய் வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். கடன் சுமை குறையும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். பேச்சில் நிதானம் தேவை. பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தால் கவனம் தேவை. வம்பு தும்புகள் ஒழியும். வெளிவாட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடம் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் பெரும் லாபம் தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மாணவர்கள் உற்சாகம் கூடும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**கடகம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். கையிருப்புகள் கரையும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். புது முயற்சிகள் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. குடும்ப ஆரோக்யம் சீராகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. தொழிலாளர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். திருப்புமுனையான காலம். தங்க நகைகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. செல்வாக்கு உயரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்ல செய்திகள் நாடி வரும். முயற்சிகள் வளர்ச்சி அடையும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பொறுப்புகள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதம் உண்டாகும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பணவரவு உண்டு. அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். உற்சாகம் அதிகரிக்கும். உயர்வுகள் தாமதமாகும். தன சேர்க்கை உண்டு. மனநிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணியாட்களிடம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,T




**சிம்மம்:** வெற்றிச் செய்தியை தொட்டு ரசிக்கும் வாரம். கலை ஆர்வம் பெருகும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. செல்வாக்கு உயரும். முன் கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். குழப்பங்கள் நீங்கும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல் திறமை அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிகள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். ஆசைகள் நிறைவேறும். பணியில் இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். விரோதங்கள் விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தெம்பும், தைரியமும் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 4,6,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,L




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதரி வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. சோம்பல் அதிகரிக்கும். பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. ஆலய தரிசனம் அமைதி தரும். வெளியூர் பயணம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடிவரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியால் செலவுகள் அதிகரிக்கும். வீண் பழி அகலும். பொன், பொருள் சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். விளையாட்டுத் துறையால் வெற்றிக் கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தகத் தொழில் லாபம் தரும். பயணம் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவகிரஹம், அதிர்ஷ்ட எண்: 8,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Q





**துலாம்:** வகையான வாழ்வும் முறையாக கிடைக்கும் வாரம். விரயங்கள் அதிகரிக்கும். பணவரவு கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். தடைகள் விலகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. ஞாபகத்திறன் அதிகரிக்கும். தனலாபம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமை மிக்க காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கக் கூடிய காலம். வழக்குகள் சாதகமாகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய் பேச்சில் நிதானம் தேவை. வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். பொன்னான காலம். சுபச்செலவு அதிகரிக்கும். சாதகமான வாய்ப்பு அமையும். குழப்பங்கள் அகலும். முன்கோபம் தவிர்க்கவும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். செயல்களில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். முற்போக்கு சிந்தனை வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E

(தொடர்ச்சி 26 பக்கம்)

# 24ம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. தம்பாபிள்ளை நடராஜா

(கம்பளை நடராஜா)
(முன்னாள் பங்காளர்– ஏ.எஸ்.நாகலிங்கம் பிள்ளை அன் சன்ஸ்–கம்பளை)

தோற்றம்: 09.04.1927 மறைவு: 05.03.2001
திதி: 09.03.2025

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி. நடராஜா இராசபூபதி

தோற்றம்: 14.12.1937 மறைவு: 23.04.2022
திதி: 19.04.2025

### எம் நினைவைவிட்டு அகலாத அன்பான பெற்றோரே!

அப்பாவும் அம்மாவும் எம் காக்கும் தெய்வங்களாய் கண்டு நாம்
அனுபவித்த வாழ்க்கை அப்பா மறைந்த நாளன்று இருண்டது
இருபத்திநான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நாம் இழந்த தலைவா
நீங்கள் இல்லா நெடும் பயணம் இன்னும் கனக்கிறது அப்பா
கண்டிப்பும் கண்ணியமும் கொண்டவராய் எம்மை தாங்கினீர்கள்
காசு பணம் பாராது எமக்கு கல்வியறிவு ஊட்டினீர்கள்
உங்கள் பண்புகள் பற்றி தொடர்ச்சியாய் அம்மா புகழ்ந்திடும்
புனிதர் நீங்கள். உங்கள் நினைவுகளோடு
நாம் தொடர்ந்து வாழ்வோம்!

எம் இதயத்தில் என்றும் நிறைந்தவராய் திகழ்ந்தீர்களே அம்மா
இன்றோ நாம் தவித்து நிற்க இறைவனடி சென்று உறைகின்றீரோ!
எம் அப்பாவை ஆண்டுகள் பல முன்பே பறிகொடுத்து பதறி நிற்க
என்றும் எமக்கு அன்பையும் ஆறுதலையும் அளித்த தெய்வமே
பெற்றவளாய் மாத்திரம் நீங்கள் எம்மை வளர்க்கவில்லை
பொறுப்புள்ள காவல் தெய்வமாய் காத்து நின்றீர்கள்
உற்றவராய் இவ்வுலகில் உடனிருந்த உத்தமியே
உம் பிரிவு எம்மை வாட்டிநிற்க எப்படி நாம் வாழ்வது இங்கு!

விழிகள் நீர் சொரிய இதயம் இமயமாய்க் கனக்க, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன்

தகவல்: மகன்மார்
கோகிலராஜா 647-338-6308
ஸ்ரீறஞ்சன் 44 7908 758991
கிருபாகரன் 33 618 010507

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)





**விருச்சிகம்:** புகழும், பொருளும் பெருகும் வாரம். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வயிற்று உபாதைகளும் உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க ே நரிடும். நன்மைகள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. தனம் சேரும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல்சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். ஆக்கம் அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைகொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். ஆடம்பர நாட்டம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். இனிய தகவல் வந்து சேரும். முயற்சிகள் பலிதமாகும். வெளிநாட்டு பயணம் ஏற்படும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண் 3,5,6,7
அதிர்ஷ்ட நிறம் சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T





**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். வாழ்த்துக்கள் கிட்டும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மனநிம்மதி கூடும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புது முயற்சிகள் பலன் தரும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினரிடம் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். திருமண முயற்சி பலன் தரும். தொழில் வாய்ப்புக்கள் பெருகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாய கோரிக்கைகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. லஷ்மி கடாட்ஷம் பெருகும். பண நடமாட்டம் உண்டு. உழைப்பிற்காக பலன் கிடைக்கும். நீண்ட நாள் நோய் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**மகரம்:** பொன்னும் பொருளும் சேரும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். செய்த்தொழில் சிறப்படையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பணவரவு திருப்தி தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும் புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுபடும். செலவுகள் அதிகமாகும். உடல்நிலையில் கவனம் தேவை. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஆண்டாள் பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E




**கும்பம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பழைய கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். குடும்ப பாசம் கூடும். தொழில் வளம் பெருகும். திட்டம் வெற்றி பெறும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. கவனமுடன் செயல்பட வேண்டும். பணவரவு உயரும். பொன் பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குதூகலம் கூடும். பழைய கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. பெண்களுக்கு யோகம் கூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வ நம்பிக்கை உண்டாகும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கை கூடும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். வரவுகள் மிகுதியாகும். விரோதங்கள் விலகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். வாய்ப்புக்கள் பெருகும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். தாய் வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். காதல் கசக்கும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,S




**மீனம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் சரளமாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி கூடும். கௌரவமான காலம். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் உண்டாகும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு உருவாகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். ஆதாயம் பெருகும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். வியாபாரம் விருத்தியாகும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். புதிய முயற்சிகளை தள்ளி போடவும். கமிஷன் தொழில் லாபம் தரும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். சாதகமான வாய்ப்பு உருவாகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. புண்ணியம் சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்ள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியவர்களின் ஆலோசனை பலன் தரும். பெருமைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சாராய குப்பியும் அரிசியும் வழங்கி வாக்கு கேட்பவர்களை நிராகரிக்க வேண்டும் என்கிறார் தேசிய மக்கள் சகக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு

**கனகராசா சரவணன்**



ஆண்களுக்கு சாரய குப்பிகளையும் பெண்களுக்கு அரிசியையும் வழங்கி வாக்கு கேட்பவர்களிடம் ஏமாந்து மீண்டும் 5 வருடம் பழைய ஒரு துப்பாக்கியமான நிலமைக்கு தள்ளப்படும் எனவே கிராமங்களிலும் ஊழல் மோசடியற்ற கட்டமைப்பை உருவாக்க வேண்டுமாக இருந்தால் குற்றவாளிகளாக நிர்ணயிக்கப்பட்டவர்கள் பழைய தரப்பினரை நிராகரித்து திசைகாட்டி சின்னத்துக்கு வாக்களிக்கவும் என தேசிய மக்கள் சகக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் பெண் வேட்பாளர்களது புதூர் மற்றும் திருச்செந்தூர் வட்டாரங்களினது காரியாலயம் அந்தந்த வட்டார தலைவிகள் தலைமையில் திறந்துவைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றது இதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டு உள்ளூராட்சி தேர்தலில் ஏன் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என தெளிவாக தெரிவித்திருந்தார் தேசிய மட்டத்தில் ஊழல் மோசடிகளை இல்லாமல் செய்து சிறந்த ஒரு ஆட்சி கட்டமைப்பை உருவாக்கி கொண்டு வருகின்றோம் அதன்படி அரசியல் செயற்பாட்டையும் அரசாங்கம் என்ற ரீதியில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.



எனவே கிராமங்களிலும் ஒரு ஊழல் மோசடியற்ற ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டுமாக இருந்தால் இந்த தேர்தலில் போட்டியிடுகின்ற பழைய அதே தரப்பினருக்கும் மற்றும் குற்றவாளிகளாக நிர்ணயிக்கப்பட்டவர்கள் மீண்டும் வாக்களித்து நாங்கள் சந்தர்ப்பம் வழங்கப் போகின்றோமா? என்ற விடையத்தை முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டும்.

இது ஊரை சுத்தப்படுத்துகின்ற முயற்சியாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் அமையப் போகின்றது எனவே தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் திறமையானவர்கள் எந்தவொரு ஊழல் குற்றச்சாட்டிலும் ஈடுபடாதவர்கள் சமூகத்துடன் ஒன்றினைந்து சேவையாற்றுபவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

தற்போது எதிராக போட்டியிடுபவர்கள் ஆண்களுக்கு சாரய குப்பிகளையும் பெண்களுக்கு அரிசியையும் கொடுத்து வாக்கு கேட்பவர்கள் எனவே அதனை வாங்கி ஏமாந்து மீண்டும் 5 வருடம் பழைய ஒரு துப்பாக்கியமான நிலமைக்கு தள்ளப்படும் நிமையிருக்கின்றது எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு இப்படிப்பட்டவர்களை நிராகரித்து சிறப்பாக இந்த நாட்டையும் பிரதேசத்தையும் நேசிக்கின்றவர்களை சபைகளுக்கு அனுப்பவேண்டும் என்பது சிறந்ததாக அமையும்.

இந்த பிரதேசமான திமிலதீவைச் சேர்ந்த தம்பி ஒருவர் வேட்பாளருக்கான விண்ணப்பத்தை என்னிடம் வழங்கினார் அவரின் விண்ணப்பம் இப்போதும் என்னிடம் இருக்கின்றது இவர் ஊர் ஊராக சென்று விண்ணப்பங்களை கொடுத்து தேர்தலில் போட்டியிடுகின்ற இவர்கள் எப்படிப்பட்டவர் என்பதை கருத்தில் கொண்டு இந்த தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

இவர்களின் நோக்கம் தாங்கள் பதவி ஒன்றை பெற்றுக் கொண்டு அதன் மூலமாக தங்களது சுயலாபத்தை மேற்கொள்வதற்காக அவர்கள் முயற்சி செய்கின்றனர் எனவே அவர்களை நிராகரித்து சிறந்த திசைகாட்டி சின்னத்துக்கு வாக்களிக்கவும் என்றார்.


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
COMMERCIAL
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
OUR SERVICE
• Purchase
- Builder Purchase
- MLS Purchase
- Private Purchase
• Equity line of Credit
• Refinance
• Renewal
CALL US
NESAN
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record

PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000

416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

Trinity Thaiyal
Tailoring and Alteration Services
Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை, ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள் வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக் கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal

உதயம் 1515 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 18, 2025

## ”ஹொண்டா தொழிற்சாலை நிர்வாகமானது அமெரிக்காவின் நெருக்கடிகளினால் எதுவுமே பின்வாங்கவில்லை

### – கனடா ஹொண்டா தலைமையகம் அறிவிப்பு



”ஒன்ராறியோவின் அலிஸ்டன் நகரில் இயங்கிவரும் எமது ஹொண்டா வாகன உற்பத்தி தொழிற்சாலையின் உற்பத்தியானது எதிர்வரும் காலங்களிலும் முழுமையான உற்பத்தித் தி-றனில் செயல்படும்” என அலிஸ்டன் நகரில் செயற்பட்டு வரும் கனடா ஹொண்டா தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அவசரப்புத்தி வெளிப்பாட்டின் விளைவாக அறிவிக்கப்பட்டுள்ள வாகனங்கள் மீதான வரிக் கட்டணங்களைத் தவிர்ப்பதற்காக தனது ஹொண்டா வாகனங்களின் உற்பத்தியை அமெரிக்காவிற்கு மாற்றுவது குறித்து பரிசீலித்து வருவதாக ஜப்பானிய மொழிப்பத்திரிகையின் செய்தி வெளியானதை அடுத்து, அந்த செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் “எதிர்வரும் எதிர்காலத்திற்காக“ எமது ஹொண்டா தொழிற்சாலை, முழு உற்பத்தியையும் வைத்திருப்பதாக ஹோண்டா கனடா அறிவித்துள்ளது. (தொடர்ச்சி 7ம் பக்கம்)

## மார்க்கம் நகரில் நடைபெற்ற கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் விருது விழாவில் இவ்வருடத்திற்குரிய 6 வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பெற்றனர்







கடந்த 12ம் திகதி சனிக்கிழமையன்று மார்க்கம் நகரில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு சம்மேளனத்தின் தலைவர் அரி அரி-கரன் அவர்கள் தலைமை வகித்தார். இங்கே காணப்படும் படங்களில் --சிறந்த வர்த்தக பெண் வர்த்தக முயற்சியாளர் விருது பெற்ற வினோகா கண்ணன் -சிறந்த இளம் வர்த்தக வெற்றியாளர் விருது பெற்ற கஜன் நித்தியானந்தன் சிறந்த சமூக சேவையாளர் விருது பெற்ற சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி அவர்களுக்குப் பதிலாக திரு மகேஸ்வரன் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (தொடர்ச்சி 13ம் பக்கம்)

## தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம் எதற்கு வாக்களிக்க வேண்டும் என்பதிலும் எமக்கு நிதானம் தேவை என்கின்றார் பொ.ஐங்கரநேசன்



தமிழ்க் கட்சிகள் எல்லாமே உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுவருகின்றன. ஜே.வி.பியை மாத்திரம் அல்ல் தென்னிலங்கைக் கட்சிகள் எதையுமே நாம் ஆதரிக்க முடியாது. தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம் எதற்கு வாக்களிக்க வேண்டும் என்பதிலும் எமக்கு நிதானம் தேவை. தமிழ்த் தேசிய அரசியலை வியா-பாரப் பண்டமாக்கி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ”வவுனியாவில் 1500 சிங்கள குடும்பங்களை குடியமர்த்த முயல்கிறார்கள்: முதுகெலும்பற்ற செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்குகின்றார்.” – *கஜேந்திரன் குற்றச்சாட்டு*



கீழ் மல்வத்து ஓயா திட்டத்தின் கீழ் வவுனியாவின் செட்டிகுளத்தில் 1500 சிங்கள குடும்பங்களை குடியமர்த்த முயல்கிறார்கள். இதை சுட்டிக் காட்ட முதுகெலும்பற்ற செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத் திட்டத்தில் நன்மை இருப்பதாக கூறி அதை ஆதரித்துள்ளார். ஏன் ஆதரித்தார் என்று சொன்னால் சர்வதேச சமூகத்தின் முன்னால் அவர் அரசை பாதுகாக்கின்றார் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், (தொடர்ச்சி 6ம் பக்கம்)

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on

HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

## காணி விடுவிப்பு தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைக்க வந்தவர்களை அச்சுறுத்திய பொலிஸார்

காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைப்பதற்கான ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்ட சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் 17ம் திகதி வியாழக்கிழமைஅன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலிவடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாக அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். (தொடர்ச்சி 18ம் பக்கம்)